6

குமரி மலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

விலை அணா 8

மலர் 12 இதழ் 12

ஜய-பங்குனி

உள்ளுறை

பக்கம்

1. கம்பனின் இதயப் பாங்கு
—ந. சுப்பு ரெட்டியார் 2

2. சர்ப்பகந்திச் செடி
—ஜகதீஸ் ஆர். மால்ஹோத்ரா 20

3. அன்றும் இன்றும்
—'நெடியோன்' 24

4. அணுகுண்டு 28

5. தேச மக்களுக்கு
—பண்டித ஜவாஹர்லால் நேரு 45

6. இராமன் கானகம் ஏகுதல்
—சு. ராஜகோபாலன் 49

7. ஹெலன் கெல்லர்
—கே. கே. துக்கால் 61

8. செய்திக் கோவை 69



திருவண்ணாமலை

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி

கோயமுத்தூர்

கம்பனின் இதயப் பாங்கு

ந. சுப்பு ரெட்டியார்

"கவிதை வாழ்க்கையிலிருந்து மலர்கிறது; அது வாழ்க்கைக்கே உரியது; வாழ்வின் பொருட்டே அது நிலை பெற்று நிற்கிறது"—இவ்வாறு ஒரு மேனாட்டுத் திறனாய்வாளர் கூறியுள்ளார். இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் பெரும்பாலான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்துப் பல புதிய குறிக்கோள் பொருள்களை உணர்த்தியதனால்தான் இலக்கிய ஆசிரியர்கள், என்றும் சிறந்த மேதைகளாகப் பாராட்டப்படுகின்றனர்; அவர்கள் இலக்கியங்களும் சாவா இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

இதை நன்கு உணர்ந்த மாத்யு ஆர்னோல்டு என்ற ஆங்கிலத் திறனாய்வாளரும் இதனால்தான் "கவிதை வாழ்க்கையின் விமர்சனம்; வாழ்க்கையின் குறிக்கோள் பொருள்களைப் பயனுறும் முறைகளில் எடுத்துக் காட்டுவதில்தான்—வையத்தில் வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்பதை உணர்த்துவதில்தான்—ஒரு கவிஞனின் திறமை பொலிவுறும்" என்று கூறிப்போந்தார்.

சிறந்த கவிஞனிடம் காணப்பெறும் ஆற்றல்களில் இரண்டு ஆற்றல்கள் சிறந்தவை. ஒன்று: உலகிலுள்ள நிகழ்ச்சிகளையும் பிற பொருள்களையும் கூர்ந்து நோக்கி பல உள்ளுறைப் பொருள்களைக் காண்பது. மற்றொன்று:

5-4-55-ல் திருச்சியில் நிகழ்த்திய வானொலிப்பேச்சு.

அருணகிரிவிலாஸ்
சீயக்காய்பவுடர்
N. ஆறுமுகம் பிள்ளை.
காரைக்குடி.
B.S

தான் அவ்வாறு கண்டு உணர்ந்தவற்றை அழகிய கவிதைகளால் கற்பனை நயத்துடன் உணர்த்தி தன்னைப் போல் நம்மையும் அவற்றைக் கவனிக்கவும் உள்ளுறைப் பொருள்களை உணரவும் செய்வது. கூறும் முறையில் கவிஞன் சுவையில் யாப்பைக் கையாளுவான்; உணர்ச்சிப் பிரளயங்களை உண்டாக்கவல்ல பல்வேறு வண்ணங்களை மேற்கொண்டு தன் கவிதைகளைச் சிறப்பிப்பான். கற்பனை நயமும் நாடகப் பண்பும் சேர்ந்து கவிதைகளைச் சிறப்புடன் மிளிரச் செய்யும். இத்தனைக்கும் மேலாக கவிஞன் தான் கண்ட உண்மைப் பொருள்களை ஆங்காங்கு உணர்த்திச் செல்வான். கம்பன் தனது இராமாயணத்தில் சமயங்கள் உணர்த்தும் ஆழ்ந்த அடிப்படைக் கருத்துக்கள், ஊழ் சம்பந்தமான கருத்துக்கள், வாழ்க்கையில் பல நிலைகளிலும் பல சந்தர்ப்பங்களிலும் பயனுறும்படியான பல அரிய உண்மைகள் ஆகியவைகளைப் பல இடங்களில் மிளிரச் செய்துள்ளான். இவை காவியம் கற்பாரின் அறியாமையைப் போக்கி அறிவு கொளுத்துவதுடன் அவர்களைக் குறிக்கோள் வாழ்க்கையிலும் கொண்டு செலுத்துகின்றன.

கம்ப ராமாயணத்தில் கம்பனின் இதயப் பாங்கை— அவன் நமக்கு உணர்த்தும் உண்மைப் பொருள்களை— ஓரளவு காண முற்படுவோம். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை போன்ற மாயைத் திரைகளினால் மூடப் பெற்றுள்ள நாம் இவ்வுலகில் கண்ணிருந்தும் பல நிகழ்ச்சிகளையும் அழகுகளையும் பார்க்க முடிகிறதில்லை; காதிருந்தும் பல அரிய செய்திகளைக் கேட்க முடிகிறதில்லை; உணர்வு இருந்தும் பல உண்மைகளை உணர முடிகிறதில்லை. கம்பன் மகா மேதையாதலால் இவற்றையெல்லாம் அவனால் காணவும் கேட்கவும் உணரவும் முடிகிறது. அவன் கண்ட உண்மைகளை, வாழ்க்கைத் தத்துவங்களை, தன்னுடைய

காவியத்தில் இலைமறை காய்களாக ஆங்காங்கு உணர்த்திச் செல்லுகிறான்; நாமும் அவன் கூறிய பிறகு அவற்றை ஓரளவு நன்கு உணர்கிறோம். இதனால்தான் பிரௌனிங் என்ற கவிஞர், கவிஞர்களைக் 'காணச் செய்பவர்கள்' (Makero see) என்றும், கார்லைல் என்பார், 'இறைவனுலகில் தெய்வீகமான தத்துவங்களைக் காண வல்லவர்கள்' என்றும் குறிப்பிட்டுப் போந்தனர். ஆர்னோல்டு என்பார் வொர்ட்ஸ் வொர்த் என்ற கவிஞனை, 'உலகிலுள்ள வியத்தகு காட்சிகளையும் புதுமையான நிகழ்ச்சிகளையும் உணர்த்தவல்ல ஞானி' என்று கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை.

உலகத் தோற்றத்தைக் குறித்துப் பல அறிஞர்கள் பலவாறாகக் கூறியிருக்கின்றனர். இன்று நம்மிடையே வாழும் ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞான மேதை பல புதுக் கருத்துக்களைக் கணித வாய்ப்பாடுகளாகக் கூறி விளக்குகிறார். கம்பனுக்கு உலகத் தோற்றம்,

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
    அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
    வேறுபா டுற்ற வீக்கம்
(சுந்த—காப்பு)

போல் காணப்படுகிறது. பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் திரிபுணர்ச்சியால் பெரும்பாலான மக்களுக்கு உண்மைப் பொருளை உணர முடிவதில்லை. மெய்ப் பொருள் காணும் அறிவு எல்லோர்மாட்டும் அமைவதுமில்லை. எப்பொருள் எத்தன்மையதாயினும் அப் பொருளின் உண்மை நிலையைக் காணும் அறிவுத் திறன் கம்பன் போன்ற மேதாவிலாசம் பெற்றவர்களிடம் மட்டிலுந் தான் அமைந்து கிடக்கும். நிலம், நீர், தீ, காற்று, வானம் என்ற ஐந்து பொருள்களும் ஒன்றாகச் சேர்ந்து இருத்தல்,

பிறத்தல், பருத்தல், வளர்தல், தேய்தல், அழித்தல் என்ற ஆறு வகையாக விகாரப்படுவதால்தான் பல்வேறு செயல்கள் நடைபெறுகின்றன என்பது கம்பன் காட்டும் உண்மை. எனவே, 'பூதம் ஐந்தும், விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்' என்று கூறுகிறான். இதைத்தான் ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

> நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் உலகம்

(தொல்–பொருள்–மரபு. சூ 644)

என்று கூறினர். பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து நின்ற உண்மையைக் காண்பது சிறந்த கவிஞனுக்கே இயலும். 'கோச் சேரமான் யானைக்கட் சேஎய் மாந்தரஞ் சேரலிரும் பொறை' என்று சொல்லும்போது நாம் அவனை ஓர் அரசன் என்று அறிவோம். ஆனல் மெய்யறிவு பெற்ற அறிஞர்கள் கோ என்பது அரசன் என்ற சாதியையும், சேரமான் என்பது ஒரு குடியையும், யானைக்கண் என்பது வேழ நோக்கினையுடைய வடிவையும், சேய் என்பது ஓர் இயற் பெயரையும், மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பது ஒரு சிறப்புப் பெயரையும் குறிக்கும் என்றும் நன்கு உணர்ந்து, இவை யாவும் ஒரு பொருளின்கண் காணப்படும் கற்பனை என்று நீக்கி அவற்றை நிலமுதல் உயிரீருகிய தத்துவங்களின் தொகுதி என்ற உண்மை நிலையை உணர்வர். இவ்வுலகிலுள்ள இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்களையெல்லாம் அவர்கள் இவ்வாறே பகுத்து உணர்வார்கள்.

கம்பன் பேரறிவு பெற்ற பெருங் கவிஞன். ஆதலால் அவன் பெறும் தத்துவ தரிசனங்களையெல்லாம் நன்ருக வடித்தெடுத்த சொற்களால் கவிதைகளாகப் புனைந்து

நமக்குத் தருகிறான்; சிறந்த வாழ்க்கைத் தத்துவங்களையும் உணர்த்துகிறான். *"மெய்யறிவு பெற்றவர்களாக இருந்தால்தான் சிறந்த கவிஞனாகத் திகழ முடியும்" என்பது காலரிட்ஜ் என்ற ஆங்கில அறிஞனின் கூற்று. இதையே கம்பன் பிரகலாதன் வாயிலாக,

கவிக ளாகுவர் காண்குவர் மெய்ப்பொருள்
(இரணியன் வதை – 32)

என்று கூறியிருத்தல் இவ்விடத்தில் சிந்தித்தற்குரியது. ஒரு கவிஞனுடைய மதிப்பை நிதானிப்பதற்குரிய உரைகல் அவன் நம்மிடையே உண்டாக்கும் மனப்பான்மையைக் கொண்டே எடைபோட முடியும் என்று எமர்சன் என்ற அறிஞரும் கூறுகிறார்.‡ கம்பன் தான் இயற்றிய காவியத் தலைவனாகிய இராமனை முழுமுதற் கடவுளாகக் கருதுகிறான்; இக் கருத்தை அனுமன் வாயிலாக,

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும்
கரகமும் துறந்து தொல்லை

* No man was ever yet a great poet without being at the same time a profound philosopher—Essay on Wordsworth: Quoted by W. H. Hudson in his 'An introduction to the study of Literature' p. 93.

‡ The great poets are judged by the frame of mind they induce—Emerson (Biagraphia literaria chap XV.)

ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்புவிட் டயோத்தி வந்தான்
(சுந்தர—பிணிவீட்—80)

என்று பேசுகிறுன். இக் கருத்தையே வீடணன் கும்ப கருணனுக்கு,

மூவர்க்கும் தலைவ ரான
மூர்த்தியார் அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்றுர்
காகுத்த வேடங் காட்டி
(யுத்த-கும்பகரு—150)

என்று உணர்த்தும் வாயிலாக மீண்டும் அறிகிறேம். இன்னும் இக் கருத்தைக் காண்டங்கள்தோறும் கூறும் காப்புச் செய்யுட்களாலும், பிற இடங்களில் வரும் கவிக் கூற்றுக்களாலும் பாத்திரங்களின் பேச்சுக்களாலும் அறிகின்றேம். இவற்றைப் படிக்கும்போது நாமும் அவன் வயத்தனுகின்றேம்; நாமும் இராம பக்தியில் திளைக்கின்றேம். இராமனைச் சிறந்த குறிக்கோள் தலைவனுகவும் கருதுகின்றேம்.

திருமாலே தசரதன் மதலையாய்த் திருவவதரித்தார் என்பது கம்பன் கொள்கை. இதைத் திருவவதாரப் படலத்தில்,

ஒருபகல் உலகெலாம் உதரத்து உட்பொதிந்து
அருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை
(பாலகாண்—திருவவ-103)

என்று கூறுகிறுன். அண்டங்களையெல்லாம் தன் வயிற்றி லடக்கிக் கொண்டிருக்கும் திருமாலை கோசலை மகனுகப் பெற்றுள் என்பது கவிஞன் நமக்குக் காட்டும் குறிப்பாகும்.

இதையே குலமுறைக் கிளத்து படலத்தில், 'எழுதரிய திருமேனி, கருங்கடலைச் செங்கனிவாய்க் கௌசலை என்பாள் பயந்தாள்' என்று திரும்பக் கூறுவதைக் காண லாம். பாலகாண்டத்தில்,

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்

(பால காண்-காப்பு)

என்று படைப்பு காப்பு அழிப்பு என்னும் முத்தொழில் களுக்கும் முதற்காரணமானவர் கடவுள் என்று கூறு கிறுன். அயோத்தியா காண்டத்தில் இவ் வுலகையெல்லாம் ஆண்டவன் உடலாகக் கொண்டவன் என்பதை,

வானின்று இழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறனும் உளஃஎன்ப

(அயோத்-காப்பு)

என்று உணரவைக்கிருன். இத்தகைய கடவுளை அரு மறைகளாலும் அந்தணர்களாலும் பிரமன் முதலிய தேவர் களாலும் அறிய முடியாது என்பதை ஆரணிய காண்டத் தில் கூறுகிருன். 'புலனைந்துக்கும் சொல்லப்படா துணர் வின் மூர்த்தி' என்ற நம்மாழ்வார் கருத்திற்கு இது இயைந் திருத்தல் உய்த்துணரத் தக்கது. இதையே சரபங்கர் பிறப்புப் படலத்தில் இந்திரன் தோத்திரமாக 'தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற சுடர்' என்று வலி யுறுத்துகிருன்.

காண்பார்க்கும் காணப் படும்பொருட்கும் கண்ணுகிப்
பூண்பாய்போல் நிற்றியால்

(ஆரணி-கவந்த-44)

என்றும் கவந்தன் வாயிலாக உணர்த்துவதையும் காண லாம். மற்றும் அவன் வாயிலாகவே,

நிற்கு நெடுநீத்த நீரின் முளைத்தெழுந்த
மொக்குளே போல முளைத்தெழுந்த அண்டங்கள்
ஒக்க உயர்ந் துனுளே தோன்றி ஒளிக்கின்ற
பக்கம் அறிதற்கு எளிதோ பரம்பரனே

(ஆரணிய-கவந்த-48)

என்று உலகத்தோற்றத்தையும் ஆண்டவன் தன்மையை யும் உணர்த்துகிருன்.

ஒவ்வொரு சமயமும் கடவுளைப் பற்றி ஒவ்வொரு வித மாகக் கூறும். ஒவ்வொரு சமயத்தவரின் மனப்பான்மைக் கேற்றவாறெல்லாம் கடவுள் என்ற பொருள் விரிந்து விளக்கந் தந்து நிற்கும். இதைக் கம்பன்,

ஒன்றே யென்னின் ஒன்றேயாம்;
பலவென்று உரைக்கின் பலவேயாம்;
அன்றே யென்னின் அன்றேயாம்;
ஆமென்று உரைக்கின் ஆமேயாம்;
இன்றே யென்னின் இன்றேயாம்;
உளதென் றுரைக்கின் உளதேயாம்;

(யுத்தகாண்-காப்பு)

என்று உணர்த்துகிருன். இவ்வுலகில் எண்ணற்ற செயல் கள் நடைபெறுகின்றன. அவை யாவும் இறைவன் நியமித்தருளிய திட்டப்படிதான் நடைபெறுகின்றன என்று சமயங்கள் முழங்குகின்றன; அறிஞர்களும் அவ் வாறே அறைகின்றனர். நல்லவர்கள் அல்லற்படுவதையும் அல்லவர்கள் இன்பமாகக் காலங்கழித்து மகிழ்வதையும் காண்கிருேம். சமய நூலறிஞர்களும் மெய்யறிவுடைய பெரியார்களும் இவற்றின் உட்கருத்தை அறியாது திகைக் கின்றனர். இத்தகைய நிகழ்ச்சியொன்று இலங்கையில்

நடைபெறுகின்றது. இந்திரசித்து மாயமாக வானத்தில் மறைந்து நின்று மலரவன் கணை தொடுத்ததனால், வானர சேனை யாவும் அழிந்துபடுகிறது; இலக்குவனும் அறிவொடுங்கி அயர்கிறான். இராமனைத் தவிர யாவரும் உயிரிழந்துவிடுகின்றனர்; இராமனைத் தேற்றுவதற்கும் வீடணன் அருகில் இல்லை. தன் நிலையைக் குறித்துப் பலவாறு புலம்பி இறுதியில் தன்னை மறந்து துயிலுறுகிறான் இராமன். இந் நிலையைக் காணும் தேவர்களும் திகைப்படைகின்றனர். அவர்கள் இராமனைப் பார்த்து,

உன்னை உள்ள படியறியோம்;
உலகம் உள்ள திறம்உள்ளோம்;
பின்னை யறியோம்; முன்னறியோம்;
இடையும் அறியோம்; பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியின் நிற்கும் அதுவல்லால்
என்னை யடியேம் செயற்பால?
இன்ப துன்பம் இல்லோனே

(யுத்தகாண்-பிரம்மா-223)

என்று கூறுகின்றனர். உலகத்து நிகழும் இன்ப துன்பங்கள் யாவும் உலகத்துயிர்க்கெல்லாம் உயிரான பரமான்மாவைச் சேரா என்பதை அவர்கள் உணர்ந்திருந்தாலும் இந் நிலை ஏற்பட்டதன் திருவுளக் குறிப்பை அவர்களால் உணர முடியவில்லை. மகாமேதையான கம்பனும் இது போன்ற நெருக்கடியான கட்டத்தில் விளக்கம் காணாது திகைக்கிறான் என்றே சொல்ல வேண்டும். மானுடப் போர்வை பெற்றாரின் பொதுத் தன்மையும் இதுதானே.

இராமன் பெருமையைக் குறிக்கும் இடங்கள் இன்னும் பல உள. அவற்றையெல்லாம் ஈண்டு எடுத்துக் கூறின் பேச்சு மிக விரியும். இராமனைக் குறித்துக் கம்பனே தற்கூற்றாக,

நினையும் தேவர்க்கும் நமக்கும்ஒத்
　　தொரு நெறி நின்ற
அனகன் அங்கணன் ஆயிரம்
　　பெயருடை அமலன்

(அயோத்-சித்திரகூட-1)

என்று கூறுகிருன். மண்ணுலகில் பிறந்து விசேட அறிவைப் பெருத நம்மைப்போலவே, அறிவு ஆற்றல்களில் மிக்கவரென்று நம்மால் மதிக்கப் பெறும் தேவர்களாலும் அவன் பெருமையை அறியவொண்ணது என்பது கவிஞன் காட்டும் குறிப்பு. ஆண்டவன் ஆயிரம் பெயருடை அமலன் என்பதையே கருடாழ்வான் வாயிலாக,

பேராயி ரங்கள் உடையாய்
　　பிறந்த பொருள்தோறும் நிற்றி

(யுத்த-நாகபா-261)

என்று கவிஞன் பேசுகிருன். இன்னெரு இடத்தில் கம்பனே தற்கூற்ருக இராமன் பெருமையை,

மும்மைசால் உலகுக் கெல்லாம்
　　மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
　　தனிப்பெரும் பதத்தைத், தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
　　மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை

(கிட்கிந்தா-வாலிவதை-71)

என்று சிறப்பித்துப் பேசுகிருன். அங்கதன் வாயிலாக,

பூதநாயகன் நீர்சூழ்ந்த புவிக்கு நாயகன் இப்பூமேல்
சீதைநாயகன் வேறுள்ள தெய்வ நாயகன் நீசெப்பும்
வேதநாயகன் மேல்நின்ற விதிக்கு நாயகன்

(சுந்தர-அங்கதன்-21)

என்று உணர்த்துகிறன். வாலி உயிர் விடுந் தருணத்தில் தம்பி சுக்கிரீவனுக்கும் மகன் அங்கதனுக்கும் உணர்த்தும் அறவுரையிலும் இராமன் பெருமை நன்கு எடுத்து இயம்பப் படுகிறது.

மறைகளும் முனிவர் யாரும்
மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும்
துணிபொருள் துணிவில் தூக்கி
அறைகழல் இராமன் ஆகி
அறநெறி நிறுத்த வந்தது
இறையொடு சங்கை யின்றி
எண்ணுதி

(கிட்கிந்-வாலிவதை-132)

என்று வாலி இராமனின் பரத்துவத்தைப் பற்றிச் சுக்கிரீவனுக்கு உணர்த்துகிறன். பின்னர் அருமை மைந்தன் அங்கதனுக்கும் இராமன் பெருமையை,

மேலொரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா!
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த

(கிட்கிந்-வாலிவதை-148)

என்று உணர்த்துவதையும் காண்கின்றேம். அரக்கர் வாயிலாகவும் இராமன் பெருமை பேசப்படுகிறது. இராமனது பேராற்றலைக் கண்டு வியந்த இந்திரசித்து,

மானிடன் அல்லன்; தொல்லை
வானவன் அல்லன்; மற்றும்
மேனிவர் முனிவன் அல்லன்
வீடணன் மெய்யிற் சொன்ன

யான்எனது எண்ணல் தீர்ந்தார்
எண்ணுறும் ஒருவன் என்றே

(புத்த-மாயாசீ-23)

என்று கருதுகிறன். காவியம் முழுவதும் இவ்வாறு உணர்த்தப்பெறும் இடங்கள் பலப்பல.

ஊழினைக் குறித்தும் வினைப் பயனைக் குறித்தும் நம் நாட்டுக் கவிஞர்கள் சொல்லியுள்ளதைப்போல வேறு எந்த நாட்டுக் கவிஞர்களும் சொல்லவில்லை; பாவ புண்ணியங்களின் கருத்துக்களும் அவ்வாறே மிகமிக வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. காவியத் தலைவனும் காவியத்தைப் பயில்வார்க்குக் குறிக்கோள் மகனுமாகிய இராமனே ஊழில் பெரு நம்பிக்கை கொண்டவனைக் காட்டப் பெறுகிறன். வேற்றுக் கொடியாள் விளைவித்த வினையைக் கேட்டதும் இலக்குவன் காற்று தாக்குதலால் நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும் ஆருக் கனல்போல் கோபங் கொள்ளுகிறன். அப்போது இராமன் நேர்ந்த காரியத்திற்கு விதிதான் காரணம் என்று எடுத்துக் காட்டுகிறன். தான் காட்டுக்குச் செல்வது தந்தையின் குற்றத்தினலன்று; தாயாகிய கைகேயியின் பிழையினலுமன்று; பரதனுடைய தவறில்தான் என்றும் சொல்ல இயலாது. அது ஊழின் பயனல்தான் இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறன் இராமன்.

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன்பிழை யன்று; மைந்த !
விதியின் பிழை

(அயோத்-நகர்நீங்கு-134)

என்பது இராமன் வாயிலாக கம்பன் காட்டும் ஊழின் குறிப்பாகும். காவியத்தின் தொடக்கம் முதல் இறுதி

வரையில் நிகழும் பல நிகழ்ச்சிகளும் ஊழின் காரணமாக நடப்பதாகவே காட்டப் பெறுகின்றன. இராவணன் செய்த தீவினைதான் தயரதனின் நரைமுடியாகத் தோன்றியது என்பதை,

> தீங்கிழை இராவணன் செய்த தீமைதான்
> ஆங்கொரு நரையதாய் அணுகிற் றாமென
>
> (அயோத்-மந்திரம்-3)

என்ற அடிகளால் கூறுகிறான். அதைக் கண்ட தயரதன் தனக்கு முதுமை எய்திவிட்டதாகக் கருதி இராமனுக்கு முடி சூட்ட எண்ணுகிறான். இராமன் பட்டமளிப்பு விழாவின் பொருட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் பேராரவாரத்துடன் நகரை அணி செய்யும்போது,

> இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
> துன்னருங் கொடுமனக் கூனி
>
> (அயோத்-மந்தரை-39)

தோன்றுகிறாள். இராமன் மணிமுடி புனைவதற்கே இடையூறு விளைவிக்கத் துணிந்து பால்போன்ற தூய கைகேயியின் மனத்தைக் கெடுக்கிறாள். அரக்கர் பாவத்தாலும் அல்லவர் இயற்றிய அறத்தாலும் தூமொழி மடமானின் மனம் திரிகிறது; இரக்கமற்ற அரக்கிபோலாகிவிடுகிறாள். இராமன் கருணையற்ற முறையில் காட்டுக்கு அனுப்பப் பெறுகிறான். இராமன் தண்டகாரண்யத்தில் பஞ்சவடியிலிருக்கும்போது, 'அரக்கர் என்னும் கான்சுட முளைத்த கற்பின் கனலியை' இராவணன் தூக்கிச் செல்ல எண்ணுகிறான். இதன் பொருட்டு அவன் மாரீசனை அணுகி அவன் உதவியைக் கேட்டபோது, அதற்கவன்,

> பேதைமதி யாலிஃதோர் பெண்ணுருவம் என்றாய்
> சீதையுரு வோநிருதர் தீவினைய தன்றோ?
>
> (ஆரணிய-மாரீசன்வதை-192)

என்று எச்சரிக்கை செய்கிறான்.

> மன்னநீயின் வாழ்வை முடித்தாய்; மதியற்றாய்;
> உன்னலன்று ஈதுஊழ்வினை என்றே உணர்கின்றேன்;
> (ஆரணிய-மாரீசன்வதை-177)

என்று இராவணன் மதிகெட்டது ஊழ்வினையென்றே எண்ணி அதையும் அவனுக்கும் உணர்த்துகின்றான். கெடு மதி கண்ணுக்குத் தோன்றாது இராவணன் தான் நினைத்த காரியத்தை முற்றுவிக்குமாறு மாரீசனை வற்புறுத்து கிறான். மாரீசனும் 'விதிவலிபோலும் இது' என்று எண்ணி அதற்கு இசைகிறான். இவ்வாறு நிகழ்ச்சிகள் ஒன்றை யொன்று தொடர்ந்து செல்லல் ஊழ்வினையின் வலியால் தான் என்று கூற்றாலும் குறிப்பாலும் கவிஞன் நமக்கு உணர்த்துகிறான். வீடணன் இராமன் பக்கம் வந்து சேர்ந்துகொள்ளுமாறு கும்பகருணனை வேண்டியபோது அவன்,

> ஆகுவது ஆகுங் காலத்து
> அழிவதும் அழிந்து சிந்திப்
> போகுவது அயலே நின்று
> போற்றினும் போதல் செய்யும்
> (யுத்த-கும்பகருணன்வதை-166)

என்று ஊழின் வழியை எடுத்து இயம்பி தம்பியைத் தேற்றி அனுப்புகிறான்.

இன்னும் காவிய முழுவதும் அதனைப் படிப்போர் வாழ்க்கை செம்மையுறுவான் வேண்டி பல அரிய கருத்துக் கள் பெய்யப்பெற்றுள்ளன. தமிழ்க் கவிஞர்கள் வாழ்க்கை யைச் செம்மைப் படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டவர்கள். காவியங்களை இயற்றும்போதும் இவ் வடிப்படை நோக்கத்தை மனத்தில் கொண்டுதான் அவற்றை இயற்றுகிறார்கள். செஞ்சையர்களும்

சிலப்பதிகாரம் சிலம்பு காரணமாக எழுந்த வரலாற்றை உலகோர் புகழும் பெருங்காப்பியமாக ஆக்கும்போது,

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்

என்ற மூன்று நீதிகளை மக்களுக்கு வலியுறுத்துவதற்காகவே, தாம் நூல் இயற்றுவதாக இளங்கோ அடிகளே கூறுகிறார். ஆனால் இத்தகைய ஒரு குறிக்கோளுக்காகக் காவியம் இயற்றுவதாகக் கம்பன் யாண்டும் கூறவில்லை.

ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதையரோ

என்று இக் கதையின்பால் தான் கொண்ட ஆசைதான் காவியம் செய்யத் தூண்டியதாகக் கூறுகிறான். நடையில் நின்றுயர் நாயகன் கதை மக்கள் வாழ்க்கைக்கு என்றும் வழிகாட்டியாக அமையக்கூடும் என்று கருதியே இக் கதையைக் காவியப் பொருளாகத் தேர்ந்தெடுத்தானோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. சுவர்க்க நீக்கத்தைக் காவியமாக வடித்தெடுக்க மில்டனிடம் எத்தகைய உணர்ச்சி தோன்றியதோ அத்தகைய தெய்வ உணர்ச்சி கம்பனிடம் தோன்றியிருக்க வேண்டும். எனவே, வாழ்க்கையை வளம் படுத்த வேண்டிய அம்சங்கள் யாவற்றையும் காவியத்தில் ஆங்காங்கு தூவிக் காவியத்தை இம்மை மறுமை இரண்டிற்கும் நல்ல முறையில் பயனுறும்படியாக அமைத்துள்ளான். காவியமும் 'நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாகித்' திகழ்கிறது; வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறியினைச் சுட்டிக் காட்டிக்கொண்டு நிலைபெற்றிருக்கிறது.

ஒரு நூல் சிறப்புற்று விளங்குவதும் அந் நூலையாத்த கவிஞன் பெரும் புகழுடன் திகழ்வதும் அந் நூலை

யாத்தற்கு அவன் தேர்ந்தெடுக்கும் பொருளைப் பொறுத் திருக்கின்றன; அத்துடன் அவன் காவியத்திடையே ஆங் காங்கு மிளிர வைக்கும் உயர்ந்த குறிக்கோள், எண்ணங் கள், அவன் உணர்த்தும் நீதிப்பண்புகள், வாழ்க்கை பற்றிய பல பேருண்மைகள் முதலியவற்றையும் சார்ந்திருக் கின்றன. கம்பன் தேர்ந்தெடுத்த கதைப்பொருளோ மிக மிகச் சிறந்தது. அறுபதினாயிரம் ஆண்டு உலகில் நீதி யுடன் ஆண்ட தசரதன் மதலையாய்த் தோன்றி அவனை விடப் பல்லாற்றானும் சிறந்து விளங்கிய குறிக்கோள் தலைவனுடைய கதையை-மன்பதைக்கு என்றும் வழிகாட்டி யாக நின்று நிலவக்கூடிய ஒன்றை-காவியப் பொருளாகத் தேர்ந்தெடுத்தது பெருஞ் சிறப்பாகும். அறுபதினாயிரம் மங்கையர்களை மணந்து வாழ்க்கை நடாத்திய மன்னன் மகன் 'இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்ற சிறந்த குறிக்கோளுடன் வாழ்ந்தவன் வரலாறு பெண்ணின்பத்தைப் பெரிதெனக் கருதி மலை வார்க்கு உள்ளொளி தந்து மனக் கோட்டத்தைத் தீர்க்கும் என்பதற்கையமில்லை. அன்றியும், பிறந்த குலத்தாலும் பெற்ற வரத்தாலும் பிற ஆற்றல்களாலும் இராமனுக்கு நிகர் என்று கருதக்கூடிய இராவணனிடம் 'பிறன் மனை நோக்காத பேராண்மை' இல்லாக் காரணத்தால் அவன் அழிந்துபடுவதைக் காணும்போது இவ் விளக்கம் இன்னும் மிகுகிறது. இத்தகைய சிறந்ததோர் வரலாற்றைக் காவிய மாக நடத்திச் செல்லும் முறை, இடையிடையே பல பல வாழ்க்கை யுண்மைகளைக் கூறுந்திறன், வேதாந்தக் கருத்துக்களை எளிதில் உணர்த்தும் பெற்றி ஆகியவை யாவும் சேர்ந்து கம்பனை உலக மகா கவிஞர்களில் ஒருவ னாக வைத்தெண்ணும்படி செய்துவிடுகின்றன. அவனும் மக்கள் இதய கமலத்தில் ஓர் உயர்ந்த பீடத்தில் அமர்ந்து

சிறப்பாகத் திகழ்கிறான். அவன் காவியத்தைப் படிப்பவர்களும்,

நாடிய பொருள்கை கூடும்;
ஞானமும் புகழும் உண்டாம்;
வீடியல் வழிய தாக்கும்;
வேரி அம் கமலை நோக்கும்

(கம்ப-தற்சிறப்புப்பாயிரம்-12)

என்று அவன் கூறிய பயனை எய்தப் பெறுவார்கள் என்பதற்கு என்ன தடை?

சர்ப்பகந்திச் செடி

ஜகதிஸ் ஆர். மால்ஹோத்ரா

இந்தியாவின் பழைய வைத்திய முறையாகிய ஆயுர் வேத சாஸ்திரமுறையையும் தற்காலமேனாட்டு வைத்தியக் கலையையும் பயன்படுத்தி இரத்தக் கொதிப்புக்கு ஒரு புதிய மருந்து தயாரித்துள்ளனர். இந்தியாவிலுள்ள ஒரு காட்டுச் செடியின் வேரினின்று அந்த மருந்து செய்கிறார்கள்.

உறக்கமின்மை, பாம்புக்கடி, குடல் நோய்கள் ஆகிய வற்றிற்குப் பல நூற்றாண்டுகளாக அந்தச் செடி உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்தச் செடி சர்ப்பகந்தி எனப்படுகிறது.

இந்த மூலிகை இரத்தக் கொதிப்பையும் அடக்கும் என்பது சமீபகாலத்தில்தான் தெரியவந்தது.

இரத்தக் கொதிப்பை அம்மருந்து படிப்படியாகக் குறைக்கிறது. மூளைக் கோளாறு உள்ளவர்களின் படபடப்பையும் அது தணிக்கிறது.

சில மாதங்களுக்கு முன் நியூயார்க் விஞ்ஞானக் கழகத்தின் ஆதரவில் நியூயார்க்கில் ஒரு மகாநாடு கூடியது. அதில் பன்னிரண்டு வைத்திய ஆராய்ச்சி நிபுணர் இந்தப் புதிய மருந்தின் பயன்களைப் பற்றி எடுத்துரைத்தார்கள். வயது முதிர்ந்தவர்களின் கவலையையும் மனத்தளர்ச்சியையும் அது போக்குகிறதென்று அவர்கள் சொன்னார்கள்.

சர்ப்பகந்தி என்றும், ராவுல்பரியா சர்பெண்டினு என்றும் சொல்லப்படும் அந்தக் காட்டுச் செடியில் பல

வகை உள்ளன. அவற்றுள் மிகவும் பயன்படும் வகையைச் சேர்ந்த செடிகள் இமய மலேயின் குன்றுகளில் வளர்கின்றன. அப்பகுதியில் நெடுங்காலமாக அந்தச் செடியைப் பற்றித் தெரியும். இப்போது இரத்தக் கொதிப்பைத் தீர்ப்பதற்கு அது உதவும் என்று தெரிந்தவுடன் அந்த வேரின் மதிப்பு அதிகமாகிவிட்டது.

மருந்து செய்யும் நான்கு முக்கிய அமெரிக்கக் கம்பெனிகள் அந்த வேரை மிகுதியாக வாங்குகின்றன. ஐந்து லட்சம் நோயாளிகளுக்கு அது பயன்படுத்தப்படுகிறது.

பதினுரும் நூற்ருண்டில் வாழ்ந்த தாவர நூல் அறிஞராகிய லியோனுர்ட் ராவுல்ப் என்பவரின் பெயர் அச்செடிக்குச் சூட்டப் பெற்றுள்ளது. இந்தியாவில் பல வகை நோய்களுக்குப் பழங்காலத்து வைத்தியர்கள் அந்த வேரை உபயோகித்திருக்கிருர்கள். அது பைத்தியத்தையும் குணமாக்கும் மூலிகை என்று இந்தியாவில் விளம்பரம் செய்கிருர்கள்.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் அது இரத்தக் கொதிப்பைத் தீர்க்கும் என்பது தெரியாது; அது நரம்புத் தளர்ச்சியை நீக்கும் என்பதும் தெரியாது. தாய்மார் பலர் அந்த வேரைப் பொடி செய்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தார்கள்.

1931-ல் இந்தியாவில் அது பற்றிய விசேஷ ஆராய்ச்சி நடைபெற்றது. அந்தச் செடியின் வேர் பலவித நோய்களுக்குப் பயன்படும் என்பதை அவர்கள் செய்த ஆராய்ச்சி நிறுவிக் காட்டியது.

அந்த ஆராய்ச்சியை டாக்டர் சாலி முஸாமான் சித்திக் என்பவரும், ராபாட் ஹுஸெயின் சித்திக்

என்பவரும் நடத்தினார்கள். டாக்டர் சாலி முஸாமான் சித்திக் அக்காலத்தில் டில்லி திபியாக் கல்லூரியில் ரஸாய னப் பேராசிரியராயிருந்தார். அவர் மேற்பார்வையில் ஹுஸெயின் சித்திக் அந்தக் கல்லூரியில் ரஸாயன ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். இப்பொழுது இரு வரும் பாகிஸ்தான் அரசாங்கத்தில் உத்தியோகஸ்தர்களாக இருக்கின்றனர். 1931-ஆம் வருஷத்தில் இவர்கள் பீஹாரில் ஒரு நகரத்துக் கடைத்தெருவில் ராவுல்பியா வேரை வாங்கி அதைப் பாகுபாடு செய்து பார்க்க முயற்சி செய்தார்கள்.

"நாங்கள் அந்த வேரைப் பொடி செய்து அதில் ஐந்து படிகப் பொருள்களைக் கண்டோம்; அவை புதியனவாகக் காணப்படுகின்றன" என்று அவர்கள் சொன்னார்கள்.

பல ஆண்டுகளாக ராவுல்பியாவின் தன்மைகளைக் கல்கத்தாவைச் சேர்ந்த பௌதிக அறிஞர் இருவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தனர். டில்லி அறிஞர் அது பற்றிய உண்மையைத் தெரிவித்த காலத்தில் கவிராஜ் கணநாத் சென் டாக்டர் கார்டிக் சந்திரபோஸ் ஆகிய அவ்விருவரும் ராவுல்பியா மனக் கிளர்ச்சியை மாற்றி அமைதி கொடுப்பதுமல்லாமல், இரத்தக் கொதிப்பையும் தீர்க்கிறது என்று கண்டார்கள்.

"முறைப்படி ஒழுங்காக இதனை உபயோகித்து வந் தால் தலைவலி, உடல் வெப்பம், உறக்கமின்மை ஆகிய வற்றை இது விரைவில் தீர்க்கிறது; இரண்டொரு வாரத் தில் 200 ஆக இருந்த இரத்த அமுக்கம் 116 ஆகக் குறைந் திருக்கிறது" என்று அவர்கள் சொன்னார்கள்.

ஹிஸ்டீரியா நோயையும் இது தணிக்கிறது. அந்த இரண்டு டாக்டர்களும் இம்மருந்து மிகவும் சிறந்ததென் றும், உலக முழுவதுமுள்ள வைத்தியர்கள் இதைப் பயன் படுத்துவது நல்லதென்றும் சொன்னார்கள்.

கிட்டத்தட்ட அதே காலத்தில் கல்கத்தாவிலுள்ள வைத்தியக் கல்லூரியில் கர்னல் (ஸர்) ராம்ராத் சோப்ரா வின் தலைமையில் ஆராய்ச்சிகள் பல நடைபெற்றன. மருந்துகளைப்பற்றிய ஆராய்ச்சியில் உலகப் புகழ்பெற்றவர் சோப்ரா என்பவர். சோப்ராவின் தலைமையில் ஆராய்ச்சி கள் பல நடைபெற்றன. இந்தியாவிலுள்ள விஞ்ஞான சஞ்சிகைகளும் வைத்தியப் பத்திரிகைகளும் 1940–ஆம் ஆண்டில் ராவுல்பியாவினின்று மருந்து செய்வது பற்றிச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டன.

வேறு சில இந்திய பௌதிக விஞ்ஞானிகளும் இரத்த அமுக்கத்துக்கு இந்த வேரைப் பயன்படுத்துவதுபற்றிய ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். பி. பி. பாட்டியா, என். கே. சக்கரவர்த்தி, எம் என். ராய் சௌத்திரி, ஆர். என். சௌத்திரி என்பவர்கள் முக்கியமானவர்கள்.

ராவுல்பியா என்னும் சர்ப்பகந்தி இரத்தக் கொதிப் பைத் தீர்க்கிறது என்று முதலில் தெரிவித்த அமெரிக்கர் டாக்டர் ராபர்ட் வில்கின்ஸ் என்பவர். அதன் பின் அமெரிக்க மருந்துக் கம்பெனிகள் அதுபற்றி ஆராய்ச்சி நடத்தின. அந்த வேரைக்கொண்டு செய்த மருந்துகள் எவ்வாறு நோய் தீர்க்கின்றன என்பதை ஆராய்ச்சி காட்டியது.

அன்றும் இன்றும்

'நெடியோன்'

என்னுடைய பல நண்பர்களுள் ஒரு சிறு கதை எழுத்தாளரும் உண்டு; அவர் என்னைக் காணவரும்போதெல்லாம் ஏதாவது ஒரு கதையைக் கொண்டு வந்து என்னைப் படிக்கச் செய்வார். நேற்று அவர் வந்திருந்தார். வழக்கம் போலத் தாம் எழுதிய கதையைக் கொடுத்து விட்டுச் சென்றார். நானும் கதையைப் படித்து முடித்தேன்.

கதையின் அடிப்படை அமைப்பு இதுதான்: காதலனால் கைவிடப்பட்ட கிராமத்துப் பெண்ணொருத்தி அவனைத் தேடி அலைகிறாள். அவனிருந்த நகரத்தில் வந்து தேடுகிறாள்; அவன் மட்டும் கிடைக்கவில்லை. நகர வாழ்க்கையின் சிறப்பையும், விரைவையும், வசதிகளையும் கண்டு அவள் மலைத்து விடுகிறாள்............

இதைப் படித்தவுடனே தாமஸ் ஹார்டியின் 'Far from the madding Crowd' என்ற கதையில் வரும் பாத்திரம் ஒன்றின் நினைவு வந்தது. இத்தகைய அடிப்படையை எப்படியெல்லாம் கொண்டு அமைத்திருக்கிறார்கள் எழுத்தாளர்கள், எண்ணத் தெரிந்தவர்கள் என்று சிந்தித்தேன்.

என் நண்பர் எழுதிய பெண், நகரத்தில் காதலனைக் காணாமல் தவிக்கிறாள். தூரத்தில் தன் காதலனைப் போலத் தோற்றமளித்தவர்களை எல்லாம் நெருங்கிச் சென்று பார்த்தபோது வேறு யாரோவாக இருந்தார்கள். நடந்து நடந்து அவள் கால்கள் தள்ளாடின. தார் போட்ட

சாலையில் விழுந்து பிரதிபலிக்கின்ற கதிரவனின் கிரணங்கள் அவளுடைய கண்களைக் கூசச் செய்தன. காதலனைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று உற்று உற்று நோக்கியதால் கண்கள் வலியெடுக்க ஆரம்பித்தன. மக்கள் பெருக்கத்தைக் கண்டு அவள் மருண்டாள்; வியந்தாள்; மலைத்து நின்று விட்டாள்.

* * * *

இதே போன்ற ஒரு நிலையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் காண்கிறோம். ஒரு பெண் தன் கணவனைப் பிரிந்து விட்டாள். இந்தப் பிரிவு எப்படி நேர்ந்ததென்பது தெரியவில்லை. கணவனைத் தேடிப் புறப்படுகிறாள். ஊர் ஊராகத் தேடுகிறாள். விழாக்களிலே, சோலைகளிலே, மக்கள் கூடியிருக்கின்ற இடங்களிலெல்லாம் தேடுகிறாள். மக்கள் தொகையைக் கண்டு அவளும் வியக்கின்றாள். 'வானத்து மீன்களைக் காட்டிலும் மிகுதியாக இருக்கிறார்களே மக்கள்' என்ற வியப்பு அவளுக்கு ஏற்பட்டது. அதை அடுத்து, இத்தனை பேர் இருந்தும் 'அவர்' இல்லையே என்ற ஏக்கம் தொடர்கிறது. இவர்களெல்லாம் 'பிறர்'தானே, 'அவர்' அல்லவே என்று அலுப்பு ஏற்படுகின்றது. கணவனைத் தேடித்தேடி உழன்றதால் கால்கள் கடுத்துப் போயின; கெஞ்ச ஆரம்பித்துவிட்டன; தள்ளாடிய கால்களின் நிலைமை இது வென்றால், கூர்ந்து பார்த்துக் கொண்டு வந்த கண்கள் ஒளி மழுங்கிவிட்டன. பார்வை மறைந்து விட்டது. இப்படித் துன்புற்றாள் அவள். அந்தப் பெண்ணின் மனம் கவிதை வளம் மிகுந்தது. தன் எண்ணத்தை, துயரத்தை—காட்சியை உருவாக்கினாள்; கற்பனையைக் கூட்ட வில்லை. உணர்ந்ததை அப்படியே வைத்தாள்; அழகிய கவிதை ஒன்று வெளிவந்தது.

புலவர்கள் எல்லாம் அதைப் போற்றினார்கள்; என்ருலும், தனி ஒருவருடைய உணர்ச்சிகளை வெளியிடுகிற கவிதையை, மற்ற—அனைவர்க்கும் பொதுவாகக் கூடிய உணர்வுகளைக் கூறும்—கவிதைகளோடு சேர்த்து எண்ணுவது எப்படி யென்று சிந்தித்தார்கள். பிறகு, பாடிய பாடலில் கூறப்படுகின்ற பாத்திரத்தைமட்டும் சிறிது மாற்றி விட்டார்கள். அந்தக் கவிதை அழியாத ஓவியமாக அமைந்து விட்டது. கணவனைத் தேடிச் சென்ற காதலியின் உணர்ச்சி யனுபவங்கள் என்பதற்குப் பதிலாக, தன் மகளையும் அவள் கணவனையும் தேடிச் சென்ற (செவிலித்) தாயின் அனுபவங்கள் இவை என்று வகுத்தார்கள். வெளியுலகின் பரப்பைக் காணுத அவள், மக்கள் மிகுதியைக் கண்டு வியந்து மருண்டதாக அமைத்தால் அழகு என்று கருதி அமைத்தார்கள். பாடல் அப்படியே வழங்கி வரலாயிற்று.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே

—வெள்ளிவீதியார் (குறுந்தொகை 44)

[பரிதப்பின—நடை ஓய்ந்தன; வாள்—ஒளி; அகல்—அகன்ற; இரு விசும்பு—பெரிய ஆகாயம்; மன்ற—மிகவும் நிச்சயமாக.]

இடைச்சுரத்துச் செவிலித்தாய்
கையற்றுச் சொல்லியது

[இடைச்சுரம்—பாலைநிலம்; கையற்று—மிகவருந்தி]

காதலனைத் தேடிச் செல்கின்ற பண்பை—நிகழ்ச்சியை நாம் காண்கிருேம்.

இந்த நாளில், கதைகள் அந்த அடிப்படையைக் கொண்டே வெளிவருகின்றன; படங்களில் அதையே

காண்கிறோம். இந்தப் பண்பு இயல்பானது. என்றும் இருப்பது. இதனை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் காண முடிகிறது. இனி வருங்காலத்திலும்இந்த இயல்பு காணப் பெறும். ஆனால் சூழ்நிலை மட்டும் மாறும்; பழைய நாட்களில் ஆற்றங்கரையிலும், சோலையிலும், பாலைவழியிலும் தேடிய தலைவி, இப்பொழுது பூங்காவிலும், நகரத்திலும், ரயிலிலும் தேடுகிறாள். இனி வரும் காதலி விமானத்திலும், பிறநாடுகளிலும் சென்று தேடுவாள் என்று கொள்ளலாம். என்றாலும், அன்றும் இன்றுமாக, அமைகின்ற அடிப்படைப் பண்பு—இயல்பு—ஒன்றேயல்லவா?

அணுகுண்டு

அணுகுண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள் சோதனைகளால் நேரிடும் ரேடியக் கிளர்ச்சி விளைவுகளைக் குறித்து, அமெரிக்க அணு சக்திக் கமிஷன் தலைவர் ஸ்ரீ லூயி ஸ்ட்ராஸ் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதனைக் குறித்து ராஜாஜி தமது கருத்தைப் பின்வருமாறு கூறினார்.

ராஜாஜியின் கருத்து

அமெரிக்கா தனது தற்காப்புக்கு உகந்தது என்று தவறான எண்ணத்துடன் அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. இந்தச் சோதனைகளின் விளைவுகள் என்று ருசுப்படுத்தப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதுமான விளைவுகளுக்கு எதிராக, ஒரு வகைப் பாதுகாப்புப் பெறுவதற்கு உலகத்திற்கு உரிமை உண்டு. அணு ஆயுதங்கள் பிரச்னையில் அரசியல் கருத்து யாதாயிருப்பினும் சரி, அணு ஆயுத சோதனைகளின் விளைவுகளிலிருந்து பாதுகாப்புப் பெற உலகத்துக்கு உரிமை உண்டு.

சுதந்திர உலகப் பாதுகாப்புக்கு இந்தச் சோதனைகள் உதவியாக உள்ளன என்று அமெரிக்கா உரிமை கொண்டாடுகிறது. ஆனால் அந்தச் சோதனை அதன் அயல்நாட்டுக் கொள்கை சரியானதா என்பதைப் பொறுத்திருக்கிறது. அதன் அயல் நாட்டுக் கொள்கை சரியானதென்று ருசுவாகவில்லை.

'சுதந்திர உலகம்' என்ற சொற்றொடர் வெறும் அமெரிககத் தன்மையைக் குறிக்கும் பரிபாஷையாகி

விட்டது என்பதையே ஸ்ரீ லூயி ஸ்ட்ராஸின் அறிக்கை காட்டுகிறது. அவரது அறிக்கையிலிருந்து உலகத்துக்குக் கொஞ்சமேனும் சுதந்திரமில்லை, உலக ஸ்தாபனத்துக்குக் கொஞ்சமேனும் அதிகாரமோ அல்லது செல்வாக்கோ இல்லை என்று முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.

சென்ற ஆண்டில், பசிபிக் பிராந்தியத்தில் ஒரே ஒரு ஹைட்ரஜன் குண்டைச் சோதனைக்காக வெடித்ததில், ஏழாயிரம் சதுர மைல் விஸ்தீரணத்துக்குப் பாதகம் ஏற்பட்டதென்றும், இங்கிலப்பரப்பின் ஓரத்தில் மரண விகிதம் ஐந்து முதல் பத்து சத விகிதமென்றும், இரண்டாயிரத்து எண்ணூறு சதுர மைல் விஸ்தீரணமுள்ள நடுமையப் பகுதியில், மரண விகிதம் நூற்றுக்கு நூறு என்றும் விளக்கமான புள்ளி விவரங்களையும் ஸ்ரீ ஸ்ட்ராஸ் கொடுத்திருக்கிறார். இவ்வளவு இருந்தும்கூட, அணு ஆயுதப் போர் பயத்தை அடியோடு ஒழிப்பதற்கான பயனுள்ள சர்வதேசத் திட்டம் வகுக்கப்படும் வரையில் இந்தச் சிற்சில விபத்துக்களுக்கு இடமிருந்தாலும், அமெரிக்கா தொடர்ந்து சோதனைகளை நடத்தி வருமென்றும் ஸ்ரீ ஸ்ட்ராஸ் கூறுகிறார்.

இது பயந்து போன பூனை தன் வாலையே விரட்டிக் கொண்டிருப்பது போலிருக்கிறது. அணு ஆயுதம் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் எதிராக இல்லாமல், உலகம் பூராவுக்கும் எதிராகப் பாதுகாப்புக்காக இப்போது உபயோகிக்கப்படும் என்று தோன்றுகிறது. அணு ஆயுதத்தின் சார்பில் ஸ்ரீ ஸ்ட்ராஸ், "ஒரு உடன் பாட்டுக்கு வருகிறீர்களா? இல்லையேல் இதை நான் வெடித்துக் கொண்டே இருப்பேன்" என்று கூறுவது போல் தோன்றுகிறது.

அணு ஆயுதங்கள் சோதனைகளில், விபத்துக்கான சில அம்சங்கள் இருப்பது தடுக்க முடியாதது என்று

ஸ்ரீ ஸ்ட்ராஸ் சொல்லுகிறார். ஆனால் நாட்டின் பாதுகாப்புக்காகச் சோதனைகள் நடத்தும் திட்டம் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதற்கெதிராகத்தான் இந்தச் சிற்சில விபத்து அம்சங்களை மதிப்பிட வேண்டியிருக்கிறது. இந் நிலையில் சுதந்திர உலகின் நன்மைகளைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. அதன் நன்மை தீமைகளை எடை போட்டுப் பார்த்துப் பலனில்லை என்று அமெரிக்கா கருதுகிறது.

அமெரிக்கா பல உரிமைகளைப் பலமாகக் கோரி வருகிறது. அவைகளுடன், உலகத்தின் "நீரையும் காற்றையும் ஆபாசப் படுத்துவதற்கான" உரிமையையும் சேர்க்க வேண்டுமோ என்று தோன்றுகிறது. தேசத்தின் பாதுகாப்பு நன்மைக்காக, உலகத்தை "ஆபாசப்படுத்த" அமெரிக்காவுக்குள்ள உரிமையை, சர்வதேச தூதுக் கோஷ்டிகள் இங்கும் அங்கும் செல்வதற்கு ஏராளமாகப் பணத்தைச் செலவிடும் உலக நன்மையின் பாதுகாவலர்கள் அங்கீகரித்து விட்டதாகத் தோன்றுகிறது.

பிப்ரவரி பதினைந்தாம் தேதியன்று வெளியான செய்தி ஒன்று, "வேகமாகக் கிளம்பும் காற்று, அணுக் கிளர்ச்சியுள்ள மேகங்களை இன்று ஜன நெருக்கம் உள்ள பகுதிகளுக்குக் கொண்டு போகுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆகையால் புது அணுகுண்டு சோதனை வரிசையில், முதல் சோதனையை நாளை வரை ஒத்தி வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அமெரிக்க அணுசக்தி நிபுணர்களுக்கு உண்டாக்கிவிட்டது" என்று கூறுகிறது.

இத்தனையும் வருத்தம் தரக்கூடிய விஷயங்கள் ஆகும். ஸ்தல பொது சுகாதாரத்துக்கு அபாயமான அணுசக்தி உபபொருள்களை ஏற்றுமதி வர்த்தகம் செய்வதற்கான விளம்பரமும் பெரிதும் அதிகரித்துள்ளது. அமெரிக்காவின்

அணுசக்தி வெகு வேகமாக முன்னேறுகிறது. ஆனால் அதன் விளைவாக அமெரிக்காவில் சன்மார்க்க சக்தி அதை விட வேகமாகக் குறைந்து கொண்டே வருகிறது. பொது வாக, சன்மார்க்க சக்தி என்பது மிகவும் முக்கியமான தென்று விநயமாகவும், நட்பு முறையிலும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஏனெனில் அது ஒவ்வொரு நிமிஷமும் முன்னேறக் கூடிய சலன சக்தி படைத்ததாகும். அதே சமயத்தில், அணுசக்தி இனிமேல் இயங்கக் கூடிய சக்தியே யாகும். ஆண்டவன் அருளால் அது எப்பொழு தும் சலன சக்தி உருவத்தை அடைய முடியாது. ஏதோ ஒரு மாயைதான் அமெரிக்காவைத் தவறான வழியில் செலுத்துகிறது.

அணு ஆயுதங்களை எறிந்து விடுங்கள்

லண்டனிலிருந்து வெளியாகும் "நியூஸ்டேட்ஸ்மன் அன்டு நேஷன்" என்ற பிரபலமான இடதுசாரி வாரப் பத்திரிகைக்கு ராஜாஜி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். சமா தானத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கத்திய நாடுகள் தமது அணுகுண்டுகளைத் தூர எறிந்துவிட வேண்டு மென்று அவர் கூறுகிறார்.

"அணு ஆயுதம் என்னும் பிசாசைச் சிருஷ்டித்து விட் டோம். அதை அடக்குவதற்கு வழி, பழி வாங்குவதற் காக அதனை ஓர் ஆயுதமாக வைத்துக் கொள்வதல்ல. பிறரை எதிர்பார்க்காமல் அணு ஆயுதங்களை, நீங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் தூர எறிந்து விடுவதுதான் வழி. பதில் அடி கொடுப்பதன் மூலமாகப் பாதுகாப்புப் பெற முடியாது. அது பயத்தின் அடையாளமே. பயத்தை ஒழிப்பதற்கு வேறு பத்திரமான வழி கிடையாது. விளைவு களை லட்சியம் செய்யாமல் அணுசக்தி ஆயுதங்களைத் தூர எறிந்து விடவேண்டும்.

"யுத்தத்துக்குக் காரணமாக இருப்பது பயம் என்னும் பேய்தான். இந்தப் பேய்தான் யுத்தத்தைச் சிருஷ்டிக்கிறது. ஆகவே இதை ஒழிப்பதற்குப் பிறரை எதிர்பார்க்காமல் நீங்கள் நல்ல வழியில் இறங்கி விடவேண்டும்.

"அணுகுண்டுகளையும் ஹைட்ரஜன் குண்டுகளையும் வைத்திருப்பதால் அமெரிக்காவைப் பலமுள்ள நாடாகச் சொல்ல முடியாது. அது பலவீனத்தின் அடையாளமே. இந்தப் புதிய அபாயத்திற்கு, உலகின் மற்ற பின்தங்கிய நாடுகளைப் பார்க்கிலும் அமெரிக்காதான் அதிகமாக அஞ்சுகிறது. பின் தங்கிய நாடுகள் உலகம் முழுவதும் அழியும் போது, தாமும் பிறருடன் சேர்ந்து அழிவதற்கு அஞ்சவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அணுசக்தி ஆராய்ச்சியில் அமெரிக்காவுக்கு வெற்றி கிடைத்திருப்பினும் இந்த வெற்றி அமெரிக்காவுக்கு உண்மையில் நஷ்டமே. அமெரிக்கா விஞ்ஞானத்தைத் தனக்கு விரோதமாகவே தூண்டி விட்டிருக்கிறது. அணுசக்தி, விஞ்ஞானத் துறையில் பெரிய சாதனையே. ஆனால் அதன் விளைவு பயமே. பலத்தையோ அல்லது தைரியத்தையோ அது தரவில்லை.

"இந்தப் புதிய ஆயுதங்களின் நாச சக்தியைக் குறைப்பதற்கு வழி துறைகளைக் கண்டு பிடிப்பதற்கு முயற்சி செய்வதில் பிரயோசனம் ஒன்றுமில்லை. சத்துரு தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக எண்ணும் பொழுது தயவு, கருணை ஒன்றையும் பார்க்க மாட்டான். அந்தச் சந்தர்ப்பத்தில் அவன் தனது மனச்சாட்சிப்படி நடந்து கொள்வானென்று எதிர்பார்க்க முடியாது. பயத்தைப் போக்குவதற்குப் பிறரை எதிர்பார்க்காமல் அணுசக்தி ஆயுதங்களை எறிந்து விடுவதுதான் நல்லது. எல்லோரது சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் ஒன்று படுத்தும் சக்தி

இறைவனின் உலகிலே ஆட்சி செய்கிறதல்லவா? அந்தச் சக்தியில் நம்பிக்கை வையுங்கள். அணு ஆயுதத்தைத் தூர எறிந்துவிடுங்கள். எல்லாம் நன்மையாக முடியும். குறைந்த பட்சம் தீங்காவது ஏற்படமாட்டாது.

"அணு ஆயுதங்கள் ஒழிக்கப்பட்டால், இமாலயத்தி லிருந்து சமாதானம் என்னும் பள்ளத்தாக்கில் கொண்டு இறக்கிவிடக் கூடிய காந்த சக்தியாகவே அணு சக்தியை நாம் கருதுவோம். அந் நிலையில் அணு சக்தி, ஒரு கெட்ட கனவு என்றும், அது ஒரு பயங்கர சக்தியாக மாறியதும் மடிந்து மறைந்து விட்டதென்றும் சரித்திரம் மதிக்கும்" என்று ராஜாஜி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ருஷ்யாவின் வேண்டுகோள்

கைவசமுள்ள எல்லா அணுகுண்டுகளையும் ஹைட்ரஜன் குண்டுகளையும் அடியோடு அழித்துவிட வேண்டுமென்றும், அணு சக்திப் பொருள்களை சமாதான கால உபயோகங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும் 1955-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியில் இருந்த அளவுக்கு அதிகமாக ஆயுதப்படைகளையும், ஆயுதங்களையும் எல்லா நாடுகளும் அதிகரிக்கக் கூடாதென்றும் சோவியத் ருஷ்யா வெளியிட்ட அறிக்கையொன்று கூறுகிறது.

பிரிட்டிஷ் மந்திரி ஈடன்

மேற்படி சோவியத் அறிக்கையில் காணப்படும் யோசனையில் விஷயம் ஒன்றும் இல்லையென்றும், ஐக்கிய நாடுகளின் ஆயுதக் குறைப்புக் கமிஷன் உபகமிட்டியின் அடுத்து வரும் கூட்டத்தில், ஆயுதக் குறைப்புப் பற்றிய பேச்சு வார்த்தைகளில் கணிசமான முன்னேற்றம் காணப் படும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும், இந்தக் கமிட்டி யில் ருஷ்யாவும் பிரதிநிதியாக இருப்பதாகவும் பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி அந்தோணி ஈடன் கூறினார்.

ஜனதிபதி ஐஸன்ஹவர்

அணுகுண்டுகள் ஹைட்ரஜன் குண்டுகள் சோதனைகளைச் சர்வதேச ரீதியில் தடை செய்ய வேண்டுமென்கிற யோசனையை ஜனதிபதி ஐஸன்ஹவர் எதிர்த்தார். "நியாயமான ஆயுதப் பரிகரணத் திட்டம்தான் தேவை" என்று அவர் கூறினர்.

அமெரிக்க மந்திரி டல்லஸ்

அணுகுண்டைச் சாதாரண ஆயுதமாகக்கொண்ட ராணுவ முறையை அமெரிக்கா கீழ்க் கோடியில் கையாளுமென்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டல்லஸ் பாங்காக்கில் கூறினர்.

பிரிட்டனும் 'ஹை' குண்டு தயாரிக்கிறது

பிரிட்டிஷ் பார்லிமெண்டில், பாதுகாப்பு விவகாரம் மீது நடந்த விவாதத்தின்போது, பிரதமமந்திரி வின்ஸ்டன் சர்ச்சில், ஹைட்ரஜன் குண்டு தயாரிப்புப் பற்றிப் பின் வருமாறு கூறினர் :—

"பிரிட்டனை விட ருஷ்யாவிடம் அணுகுண்டுகள் அதிகம் இருக்கலாம். ஆனல் அணு சக்தி ஆராய்ச்சியில் ருஷ்யாவைப் பிரிட்டன் மிஞ்சிவிட்டது.

"ஒரு சில ஹைட்ரஜன் குண்டுகள் போட்டாலே வெகு தூரத்திற்கு நாசம் விளையும். இந்த சர்வ நாசத்திலிருந்து எந்த நாடும் தப்புவதற்கு எந்த விதமான வழியும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

"ஒரு விசித்திரமான நிலைமை ஏற்பட்டுள்ளது. உயிருக்கு ஆபத்து ஏற்படும் பிரதேசங்கள் ஒரு வரையறையின்றி அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. நவீன ஆராய்ச்சிகளின் விளைவு இது. இதனல் ருஷ்யாவுக்குத் தான் ஆபத்து அதிகரிக்கும்.

• "அடுத்த மூன்று அல்லது நான்கு வருஷங்களில் ஹைட்ரஜன் குண்டுகள் உற்பத்தியில் சுதந்திர உலகம் கம்யூனிஸ்டு நாடுகளை மிஞ்ச வேண்டும்; மிஞ்சவும் செய்யும். இந்த மூன்று அல்லது நான்கு வருஷத்தில் ருஷ்யர்கள் வேண்டுமென்றே ஒரு பெரிய யுத்தத்தில் இறங்குவது சாத்தியமில்லை. யுத்தத்தில் இறங்கினல் மற்ற நாடுகளும் அணு ஆயுதங்களாலேயே திருப்பியடிக்கும். ருஷ்யா தவிடுபொடியாகிவிடும். ஆனல் இதற்குள் ஏதாவது பெரிய மோதல் ஏற்பட்டுவிட்டால், அணு ஆயுதங்கள் இரு தரப்பிற்கும் கிடைக்கும். இவை உபயோகிக்கப்படமாட்டா என்று எண்ணுவது முட்டாள்தனம்"

அமெரிக்க விஞ்ஞானிகள் கோரிக்கை

அமெரிக்க விஞ்ஞானிகள் கழகம், அமெரிக்க அரசாங்கத்துக்கும், ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதிக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் வருமாறு.

1. அமெரிக்க, ருஷ்ய நாடுகளில் அணு குண்டு சோதனைகளைக் கண்டுபிடிக்க ஒரு சர்வதேச அஞ்சல் ஏற்படுத்த வேண்டும்.

2. தகுந்த பாதுகாப்புடன் குறிப்பிட்ட அளவு சோதனைகள்தான் நடத்தலாமென்று வரையறுக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. இந்த விஷயத்தில் அமெரிக்க அரசாங்கம்தான் முதல் முயற்சி எடுக்க வேண்டும். ஏனெனில் அமெரிக்கச் சோதனைகளை ஆசியா–சரியோ, தவறோ–எதிர்க்கிறது. மற்ற நாடுகளுடைய மக்களது பாதுகாப்பையும் சுகத்தையும் அமெரிக்கா துச்சமாக மதிக்கிறது என ஆசியா நம்புகிறது.

அணுகுண்டின் பிதாவான டாக்டர் ஆப்பன் ஹைமர், பேராசிரியர் எர்னெஸ்ட் போலார்டு, பேராசிரியர் ஸ்டான்லி லிவிங்ஸ்டன் போன்ற மேதைகள் இந்தக் கழகத்தின் அங்கத்தினர்கள்.

ஜனாதிபதி டிட்டோவின் கருத்து

யுகோஸ்லேவியாவின் ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, அந்த நாட்டுப் பார்லிமெண்டில் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:—

“ அணு சக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தினால் தான் மனித வர்க்கம் முன்னேற முடியும். அணுகுண்டை உபயோகிப்பது மற்றவர்களைப் பயமுறுத்திப் பணிய வைக்கும் கேவல நடவடிக்கையாகும். அணு அல்லது ஹைட்ரஜன் குண்டு யுத்தம் வந்தால் மனித வர்க்கமே அழியக்கூடும். மாபெரும் விஞ்ஞானப் பொக்கிஷமான அணுசக்தியை எந்த நாடும் துஷ்பிரயோகம் செய்யாதபடி கண்காணிக்க, அனுஷ்டான சாத்தியமான சர்வ தேச ஏற்பாட்டை வகுக்க வேண்டும். அணுசக்தி ஒரு சில வல்லரசுகளின் ஏகபோக உரிமையல்ல. சின்னஞ்சிறு யுகோஸ்லேவியாவிலும் அணு சக்தி மூலப் பொருள்கள் உள்ளன. நமது தொழில் தேவைகளுக்குப் போதிய அணு சக்தியை இவற்றிலிருந்து தயாரிக்க முடியும்.”

இந்தியாவின் வேண்டுகோள்

அணு ஆயுதப் போருக்கான ஏற்பாடுகளை நிறுத்தும்படி, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட இந்தியப் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் பெரிய வல்லரசுகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

ராஜாஜியின் கோரிக்கை

சென்னையில் நடைபெற்ற உலக விவகார ஆராய்ச்சி சங்கக் கூட்டத்தில் ராஜாஜி சொற்பொழிவாற்றினர். அப்பொழுது அவர் கூறியதாவது:—

உலகில் அமெரிக்காதான் பலமான நாடாகையால், அதுதான் தானுகவே முன்வந்து அணு ஆயுதங்களை ஒழிக்கும் "முதல் செயல் முறையில்" துணிந்து இறங்க வேண்டும்.

இந்த விஷயத்தில் 'ஒருதலைப்பட்ச செயல் முறை' வேண்டுமென்பதே என் கோரிக்கை. இவ்விதமான விஷயங்களில் செயல் புரிவதை மகாத்மா காந்தி ஒருதலைப்பட்சம் என்று அழைப்பது வழக்கம். எதிர்க் கட்சி எந்த விதமான செயல் புரிய வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ அந்த வகையில் அவர்கள் செயல்படும் வரையில் காத்திராமல் நீங்களாகவே செயல் புரிய முற்படுவதுதான் ஒருதலைப்பட்ச செயல் முறையாகும்.

மனிதத் தன்மையில் நம்பிக்கை வைத்து, மறு தரப்பினர் முதல் நடவடிக்கை எடுப்பதற்காகக் காத்திராமல், தானே துணிந்து செயலில் முதல் முதலாக இறங்கும் மனே நிலையைக் குறிப்பதுதான் 'ஒருதலைப் பட்ச செயல் முறை' என்பது. இதற்கு அபாரத் துணிச்சல் வேண்டும். ராணுவத் துறையில் வழக்கமாக உள்ள துணிச்சல் இதற்குப் போதாது. நவீன யுகத்தில், ராணுவத் துறையில் துணிச்சலென்பது திட்டமிடுவது, முன்னெச்சரிக்கையுடன் நடப்பது என்ற நிலைக்கு இறங்கிவிட்டது. நான் சொல்லும் துணிச்சல் முற்றிலும் வேறு விதமானது. எவ்விதத் திட்டமிடுதலுமின்றி, எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி தன்னம்பிக்கையில் மட்டுமே உறுதி பூண்டிருப்பதுதான்

இங்கு வேண்டுவது. இந்த விஷயத்தில் என் கருத்துக்கு இணங்குவது கடினமாக இருக்கும். இது சகஜம்.

எனது யோசனைகளைக் கூறும்பொழுது, மேற்கத்திய ஜனநாயக நாடுகளின் நலன்களைப் பற்றி நான் அலட்சியமாக இருப்பதாக சிறிதளவுகூட எண்ண வேண்டாம். எனது யோசனை முற்றிலும் தவருக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அவை நல்லெண்ணக் குறைவினால் ஏற்பட்டதாகவோ அல்லது இந்தியா நெருங்கிய உறவுகொண்டிருக்கும் மேற்கத்திய ஜனநாயக நாடுகளின் பந்தோபஸ்து நலன்கள் பற்றிய கவலை இல்லை என்றோ யாரும் கருத வேண்டாம்.

யுத்தம் முடிந்த சமயத்தில் இந்திய மக்களுக்கு அமெரிக்க ஆதரவு இருந்ததுதான் பிரிட்டனைப் பணிய வைத்தது. இதையறிந்த இந்தியர் எந்த விவகாரத்திலும் அமெரிக்காவுக்கு நன்றி பாராட்டவும், நல்லெண்ணம் கொள்ளவும் தவற மாட்டார்கள். அமெரிக்காவுக்கு நாம் அதிகம் கடமைப் பட்டிருக்கிறோம். இந்தியாவுடன் அமெரிக்காவுக்கு அரசியல் சம்பந்தமில்லை. ஆயினும் அன்று அமெரிக்காவின் ஆதரவு நமக்குக் கிடைத்திராவிடில், இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு முட்டுக்கட்டையாக இருந்த பிரிட்டன் பணிந்திருக்காது. இது மிகவும் தெளிவாக விளங்கும் விஷயம். அமெரிக்காவைப் பற்றி நான் கடுமையாகப் பேசும்பொழுது, எனது மனநிலை எத்தகையது என்பது இதிலிருந்து புரிந்திருக்கும்.

நான் என்ன சொல்லிக்கொண்டிருந்தாலும், அமெரிக்கர்கள் அவர்கள் வழியேதான் செல்வார்கள் என்று சிலர் சொல்லக்கூடும். அமெரிக்கா அதன் வழிதான் செல்லும். அதன் வழியில்தான் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால்

கடைசியில் சரியான பாதைக்கு வந்து சேரத்தான் போகிறது.

அமெரிக்க மக்களின் தீரம் அவர்களுடைய சரித்திரத்தில் அற்புதமாகக் காணப்படுகிறது. நாடு பூராவிலும் நியாய உணர்ச்சி பரவியுள்ளது. நீக்ரோக்களை விடுவிக்க அவர்கள் புரிந்த போரைக் காட்டிலும், தேசிய நியாய உணர்ச்சிக்கும் மனச்சாட்சிக்கும் வேறு சிறந்த அத்தாட்சி வேண்டுவதில்லை. அவர்கள் வேறு விஷயங்களில் தவறு செய்யவும் கூடும். நியாயம் யாருக்கும் ஏகபோக மிராசு அல்ல. ஆத்திரத்தில் தவறுகள் இழைப்பது சகஜம்.

உலகில் எல்லா உணர்ச்சிகளையும் விட, மிகவும் தவருன பாதையில் செலுத்தக்கூடிய உணர்ச்சி பயமே ஆகும். பயம் எனும் உணர்ச்சி நம்மில் சிறந்த அறிவாளிகளையும் கூட, மிகவும் தைரியசாலிகள், மிகவும் நேர்மையானவர்களைக் கூட தவருன வழியில் செலுத்தக் கூடியதாகும். அமெரிக்கா செய்வது தவறு என்று கூறும் உரிமையை எனக்களித்தால், இவ் விஷயத்தில் பயத்தினுல் தான் அமெரிக்கா தவறிழைக்கிறது என்பேன். இந்தப் பயம்தான் எனக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்கரைப் பிடிக்கவில்லை என்று அர்த்தமில்லை. அவர்களைத் தவருன வழியில் உந்தித் தள்ளும் பயம்தான் எனக்குப் பிடிக்கவில்லை.

அமெரிக்காவிடம் கேட்பதைப்போல, ருஷ்யாவிடம் ஏன் கேட்கக்கூடாது என்று நண்பர்கள் சிலர் எனக்கு எழுதியிருக்கிருர்கள். ருஷ்யா தவறிழைக்கிறது என்று நாம் நினைப்பதால், இது சரியான கேள்வி என்று அவர்கள் கருதுகிருர்கள். இது சரியான கருத்துத்தான். ருஷ்யா தவறு செய்கிறது; அமெரிக்காவை நம்பலாம், ருஷ்யாவை நம்பக்கூடாது என்றெல்லாம் நாம் நினைக்கிறோம். எனவே ஆபத்தான நடவடிக்கையை எடுக்கும்படி

அமெரிக்காவிடம் கேட்பதற்குப் பதில் ருஷ்யாவை நான் கேட்க வேண்டுமென்று நண்பர்கள் நினைக்கிறார்கள்.

நான் சொல்லும் தைரியமான நடவடிக்கையை எடுக்கும்படி பலவீனமான கட்சியிடம் எதிர்பார்ப்பது அசாத்தியம். என்னைவிடப் பலசாலியான முரடன் ஒருவனுடன் நான் சண்டைபோட நேர்ந்ததாகவும், நான் அஹிம்சையைக் கடைப்பிடிப்பேன் என்று சொல்லுவதாகவும் வைத்துக்கொள்வோம். ஜனங்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? பலவீனமான கட்சி அதை எப்போதும் செய்ய முடியாது. அவர்கள் அவ்விதம் செய்துவிட்டால், அமெரிக்காவில் உள்ள எல்லா கோஷமிடும் அரசியல் வாதிகளும் "பார்த்தீர்களா, கடைசியில் எப்படி வழிக்கு வந்துவிட்டார்கள் என்பதை; அவர்கள் சண்டைக்குத் தயாராயில்லை. அதனால்தான் இந்த யோசனைக்கு இணங்கி விட்டனர்" என்று பேசுவார்கள்.

அஹிம்சை பலசாலிக்கே; பலவீனமானவனுக்கல்ல என்று மகாத்மா காந்தி போதித்தார். பலசாலித் துஷ்டனுக்குத்தான் தாடையைக் காட்டித் தன் தைரியத்தைக் காட்ட வேண்டும் என்று அவர் உபதேசித்தார். நான் இப்பொழுது அஹிம்சை போதிக்க வரவில்லை. நாம் அகப்பட்டுக் கொண்டுள்ள சேற்றிலிருந்து மீளுவதற்கான மிகவும் பிரத்தியட்சமான காரிய சாத்திய வழியைத்தான் சொல்லுகிறேன்.

யாராவது முதல் நடவடிக்கை எடுப்பதெனில் பலசாலி நாடுதான் அதைச் செய்ய வேண்டும். அமெரிக்காவின் அணு ஆயுத எண்ணிக்கைதான் அதிகம். அதன் பலம் தான் பெரிது. அதோடு இங்கிலாந்தும் சேர்ந்தால் இன்னும் பலமாகிவிடும்.

• அமெரிக்க மந்திரி டல்லஸ், சமீபத்தில் அமெரிக்கா தான் அணு ஆயுதங்கள் விஷயத்தில் அதிக பலம் பொருந்திய தென்றும், அவசியமானால் இந்த அணு ஆயுதங்களை உபயோகிக்குமென்றும் கூறியிருக்கிறார். அவசியமேற்படும் பொழுது மேற்கத்திய நாடுகள் முழு அணு குண்டுக்குப் பதிலாக "பேபி அணு குண்டு" உபயோகிப்பதாக வைத்துக்கொள்வோம். எதிர்க் கட்சியினரும் அதே குண்டுதான் உபயோகிக்க வேண்டுமென்ற கட்டாயம் ஏதாவது உண்டா? அது சாத்தியமில்லை. ஒரு தடவை அது ஆரம்பித்துவிட்டால், அந்த அனர்த்தத்தை அல்லது பிரளயத்தை எவ்வாறு நிறுத்துவது?

சீனா தவறாக நடந்தால் சிறு அணு ஆயுதங்கள் உபயோகிக்கப்படும் என்று கூறுகிறார்கள். ஜப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்டபொழுது அதை ஆட்சேபித்து அறிக்கை வெளியிட்டேன். நேச நாடுகளைக் கலந்து கொள்ளாமல் அணுகுண்டு உபயோகித்தார்கள். எனது அறிக்கையையும் அப்பொழுதே ஆட்சேபித்தார்கள்.

ஜப்பானுடன் குண்டு நின்றுவிடவில்லை. அந்தக் குண்டிலிருந்து மேற்கொண்டு விஞ்ஞான முன்னேற்றத்துக்கு வழி கோலவில்லை. அதை ராணுவ முறையில் உபயோகிப்பதற்கான வழியில்தான் முன்னேற்றமடைந்திருக்கிறது. அணுகுண்டிலிருந்து ஹைட்ரஜன் குண்டுக்கு வந்திருக்கிறது. ஜப்பான் மீது அணுகுண்டு போடுவது என்று தீர்மானிக்காமலும், ஜப்பான் மீது அதை வீசாமலும் இருந்திருக்கும் பட்சத்தில் நாமிருக்கும் உலகம் வேறாக இருந்திருக்கும். நம்மை இன்று தொல்லைப் படுத்தும் குண்டு தோன்றியிருக்காது.

"ஹைட்ரஜன் குண்டு அனர்த்தம் விளைவிப்பதாதலால் அது எல்லோரையும் பயமுறுத்தும். அதனால் யாரும்

யுத்தத்துக்குப் போகமாட்டார்கள். அதனால் உலகம் யுத்தத்திலிருந்து காப்பாற்றப்படுகிறது" என்றெல்லாம் மாயப் பிரசாரம் நடக்கிறது. இப்பொழுது யுத்தம் வந்தால் உலகம் அழிந்துவிடும்; அதனால் அணு ஆயுதத் தடையைக் கோருவதைவிட யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சியும் பிரசாரமும் வேண்டும் என்கிறார்கள். இதற்கு அர்த்த மென்ன?

1928-ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் அறுபது நாடுகள் கூடி யுத்தம் கூடாதென்று தீர்மானித்தன. ஆனால் 1939-ல் யுத்தம் வந்தது. எனவே, யுத்தத்தைத் தடை செய்வது எளிதல்ல. அணு ஆயுதங்களை முதலில் தடை செய்ய வேண்டும். பிறகு யுத்தத்தைத் தடை செய்வது பற்றிப் பேசலாம். அணு ஆயுதங்கள் உற்பத்திக்கான போட்டி நடக்கும் சூழ்நிலையில், யுத்தம் கூடாதென்கிற எண்ணத்தை மக்கள் மனத்தில் எப்படி உண்டாக்குவது?

அணுகுண்டுகளின்றி ருஷ்யாவை எதிர்க்க முடியாது என்று கூறுவது தவறு. இவைகளைக் கண்டுபிடித்திரா விடில் உலகில் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கமிருக்குமென்று நம்புவதா?

ருஷ்யாவை நம்ப முடியாதென்று சமீபத்தில் அமெரிக்க மந்திரி டல்லஸ் கூறினார். இம்மாதிரி மனோநிலை வருந்தத் தக்கதாகும். ஹிட்லர் ருஷ்யர்களை நம்ப முடியாது என்று தான் சொல்லிக்கொண்டிருந்தார். ஆகவே இப்போதைய நிலை வேறுபட்டதல்ல. ருஷ்யாவை நம்ப முடியாதாகை யால் அவர்களுடன் எந்த ஒப்பந்தத்தையும் நம்ப முடியாது. ஆகையால் அணு ஆயுதங்கள் ஒரு தடுப்பு முறையாக இருக்க வேண்டும். இது எப்போது ஓயும்? கூடி வாழ்வ தென்ற பேச்சுக்கே இடமில்லாமல் முழு நாசம் என்கிற நிலையில்தான் இது நிற்க முடியும். இது நியாயமல்ல

என்பதை அமெரிக்க மக்களுக்குப் பணிவுடன் எடுத்துக் கூற விரும்புகிறேன். இம்மாதிரி நிலைமைக்கு அமெரிக்காவின் மனச்சாட்சி ஒப்பாது. நாம் நம்பியே ஆக வேண்டும். ஆரம்பத்திலேயே அவர்களை நம்ப முடியாதென்று நாம் சொல்ல முடியாது.

பெரிய விஞ்ஞானிகள், அணு ஆயுதங்களைச் சோதனைகளின்போது வெடிப்பதால், உலகின் சீதோஷ்ண நிலை, நீர் எல்லாவற்றையும் பாதிக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்த சோதனைகள் நடந்துகொண்டேயிருந்தால், உலகில் உயிர் தரிப்பது சாத்தியமற்றதாகும். ஆரம்பத்தில் இதைப் பற்றிய நாச சக்தி எல்லாம் மிகை என்று பிரசாரம் செய்தார்கள். இம்மாதிரி பத்து சோதனைகள் நடந்தால், உடனடியாக இல்லாவிட்டாலும் நாளடைவில் உயிரை நாசம் செய்யுமென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஒரு நாட்டு நிலைமை, நாட்டின் சாதாரண பிரஜை என்கிற முறையில் கேட்கிறேன். உங்களால் கட்டுப் படுத்த முடியாததும், சீதோஷ்ண நிலையைக் கெடுப்பதுமான ஆயுதத்தை வெடிக்க யாருக்குத்தான் உரிமையுண்டு? மனித வர்க்கத்துக்கு தீங்கு இழைக்கும் என்று சோதனைகள் மூலம் தெரிந்ததும், இத்தகைய சோதனைகள் வேண்டியிருப்பதான ஓர் ஆயுதத்தை உற்பத்தி செய்ய உலகிலுள்ள எந்த நாட்டுக்கும் உரிமை ஏது?

அணு ஆயுதங்களைத் தடை செய்யும் பணியை எப்படிச் செய்வது? ருஷ்யா தடை செய்வதை ஆதரிக்கிறது. நாம் அதை நம்பியே ஆக வேண்டும். இது இல்லையெனில், உலகில் முன்னேற்றமிராது. நாம் ருஷ்யாவையும், அதன் ஒப்பந்தங்களையும், அப்படி ஒப்பந்தம் மீறப் பட்டால் அந்த ஆயுதத்தைச் சமாளிக்க நமக்குள்ள திறமையையும் நம்பித்தான் ஆகவேண்டும். நாம் ஒருதலைப்

பட்சமான செயலில் இறங்கி, ருஷ்யாவும் அணு ஆயுதங்களைத் தடை செய்து அதைப் பின்பற்றினால் உலகம் ஆறுதல் அடையும். அப்பால் எந்தப் போரையும் எந்த எதிரியையும் சமாளிக்கலாம்.

எல்லா யுத்தங்களையும் எதிர்ப்பதில் இந்தியா உறுதியாக நிற்குமென்று நம்புவோமாக. நியாயம் கடைசியில் வென்று, இந்த ஆயுதங்களைத் தடை செய்ய மனிதன் இணங்குவானாக.

தேச மக்களுக்கு

பண்டித ஜவாஹர்லால் நேரு

[நாகபுரியில் நடைபெற்ற பாரத் சேவக் சமாஜ ஆண்டு விழாவில் பண்டித ஜவாஹர்லால் நேரு நிகழ்த்திய தலைமை உரையிலிருந்து சில பகுதிகள்]

இந்தியாவில் சோஷலிஸ பாணியில் சமூகத்தைத் திருத்தியமைப்பதற்கு முதல் படியாக ஜாதி வேற்றுமைகளை ஒழிக்கவேண்டியது அவசியம். ஜாதி வேற்றுமை, வகுப்பு வாதம் இவ்விரண்டும் தேசமக்களுக்கிடையேசமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன. இவை நீடித்தால் இந்தியா தனது சுதந்திரத்தைக் கூடப் பாது காத்துக் கொள்ள முடியாது.

இந்தியாவின் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் ஒரு முக்கியமான உண்மை விளங்கும். வெளியே இருந்து வந்த ஆக்கிரமிப்புக்களால் இந்தியா வீழ்ச்சியடையவில்லை. செயற்கை முறையில் உண்டான வேற்றுமைகளும் ஒற்றுமைக் குறைவுமே இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரண மாக இருந்திருக்கின்றன. முன் காலத்தில் நமது வீழ்ச்சிக் குக் காரணமாக இருந்த சமூக, மத வேற்றுமைகளை நாம் கட்டுப்பாடாக ஒன்றுபட்டு ஒழிக்க வேண்டும்.

தற்பொழுது இந்தியாவின் பொருளாதார, சமூகத் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டு வரு கின்றன. வெளிநாடுகளின் உதவியை விட நமது சொந்த பலத்தைக் கொண்டுதான் நம்மால் முன்னேற முடியும்.

காலத்தின் சோதனைகளைக் கண்டு சிறிதும் சஞ்சலப் படாமலும், சோர்வடையாமலும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, வீறு கொண்டு எழுந்து நெருக்கடியான நிலைமையைச் சமாளித்து சுபிட்ச இந்தியாவை உண் டாக்க வேண்டும்.

தேசத்தின் பொருளாதாரத்தைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு நமக்கு நேரம் கிடையாது. இன்றைய உலக நிலைமைதான் இதற்குக் காரணம். அமெரிக்க மக்களும், பிற மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த மக்களும் தமது நாடு களைப் புனரமைப்பு செய்வதற்கு நூறு வருஷ அவகாசம் பெற்றனர். ஆனால் நமக்கு இவ்வளவு அவகாசம் கிடையாது.

இப்பொழுதுள்ள பொருளாதார நிலையிலும் உலக நிலையிலும், தேசத்தின் செல்வமும் சக்தியும் பூரணமாக நிர்மாண வேலைகளில் செலுத்தப் படவேண்டுவது முக்கிய மானது. எத்தனையோ கஷ்டங்களையும் முட்டுக் கட்டை களையும் லட்சியம் செய்யாமல் நாம் நமது முயற்சியையும் திறமையையும் சீரமைப்பு வேலைகளில் செலுத்தவேண்டும். தேசிய ஒற்றுமை மூல்மாகவும், தன்னம்பிக்கை மூலமாக வுமே நமக்குப் பலம் ஏற்பட முடியும். மற்றும் தேசத்தின் முக்கிய பெரிய பிரச்னைகளில் கவனத்தைச் செலுத்து வது அவசியம். உள்நாட்டு அரசியல் வேற்றுமைகளை கண்ணியமான முறையில் விவாதித்துத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அற்ப விஷயங்கள், தேசியப் புனரமைப்பு வேலைக்குத் தடையாக இருக்கக்கூடாது.

மனிதனை மனிதனுக வாழப் போதிப்பதுதான் இன்றைய உலகத்தின் முக்கிய பிரச்னை. இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டு விட்டால், மற்ற பிரச்னைகளைத் தீர்ப்பதில் கஷ்டமில்லை. தினந்தோறும் சர்வதேசப் பத்திரிகைகளில் பயமுறுத்தல்

களும் அதற்குப் பதில் பயமுறுத்தல்களும் பிரசுரிக்கப் பெறுகின்றன. அணுகுண்டுகளைப் பற்றியும் ஹைட்ரஜன் குண்டுகளைப் பற்றியும் நாம் கேள்விப் படுகிறோம். இந்தக் குண்டுகளை உற்பத்தி செய்வதற்கு நம்மிடம் பொருளாதார வசதியும் இல்லை. உற்பத்தி செய்ய வேண்டுமென்ற ஆசையும் இல்லை. அணுகுண்டுகள் ஹைட்ரஜன் குண்டுகள் ஆகியவற்றால் ஏற்படக் கூடிய அழிவை, இந்தியா உலக மக்களுக்கு எடுத்துக் காட்டி வருகிறது. உலக மனிதர்கள், உண்மையான மனிதர்களாக வாழ்வதற்கு இந்தியா பாடுபட்டு வருகிறது.

நமக்கு இப்போது எஞ்சினீயர்களும் விஞ்ஞானிகளும் தான் அதிகமாகத் தேவை. நம்மிடையே சர்வகலாசாலைப் பட்டதாரிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப் படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள நிலையில் இந்தியாவில் விவசாயிகளுக்கும் மற்றும் செல்வத்தை உற்பத்தி செய்கிறவர்களுக்குமே முக்கியத்துவம் அதிகம்.

நமது நாட்டைப் புனரமைப்புச் செய்யும் உண்மையான சிற்பிகள் தேவை. பல அபிவிருத்தித் திட்டங்களை நடத்துவதற்கு நமக்குப் போதுமான விஞ்ஞானிகள், எஞ்சினீயர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் இல்லை.

நமது நாட்டில் அரசியல் புரட்சியிலிருந்து இனி சமூகப் பொருளாதாரப் புரட்சிக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

நமது முக்கியமான இன்றைய பிரச்னை நமது நாட்டை விரைவாக எல்லாத் துறையிலும் புனரமைப்புச் செய்வதேயாகும். இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரே முகமாக சலியாது உழைக்க வேண்டும்.

நமது நாட்டிலுள்ள முப்பத்தாறு கோடி மக்களிடையே உள்ள வேற்றுமையை ஒழிப்பதுதான் நமது மகத்தான பொறுப்பு. அமெரிக்கா, சீனு, ருஷ்யா போன்ற நேச நாடுகள் நமக்கு உதவி புரியலாம். ஆனுல் எந்தத் தேசமும் அதன் மக்களுடைய உழைப்பினுல்தான் முன்னேற முடியும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இராமன் கானகம் ஏகுதல்

சு. ராஜகோபாலன்

கைகேயியின் எண்ணம் ஒருவிதத்தில் கைகூடவில்லை, ஏன், அவளுக்கு அதுவே முதல் தோல்வி. இராமனுக்கு வனவாசம் ஒருவித கஷ்டத்தையும் அளிக்கவில்லை. சீதை, இலட்சுமணன் இவர்களும் அதைக் கண்டு கலங்கவில்லை. இராமனுடன் செல்வதற்கு ஒவ்வொருவரும் முந்திக் கொள்ள ஆசைப்பட்டனர். சீதையை அழைத்துச் செல்ல இராமன் இணங்கியதும், இலட்சுமணனும் தனது அவாவை வெளியிட்டான். இராமன் முதலில் சம்மதிக்க வில்லை. சில காரணங்களையும் சொன்னான். தான் வனம் போன பிறகு தன் தாயார் கௌசல்யையை யாவரும் புறக் கணிக்கக்கூடும். அவளையும் அவளை அண்டிப் பிழைப்பவர்களையும் காப்பாற்ற வேண்டும். இதற்காக இலட்சு மணன் அயோத்தியில் இருப்பது நலம் என்றான். இலட்சு மணன் சம்மதிக்கவில்லை. அன்னை கௌசல்யையைக் காப்பதற்கு ஒருவரும் வேண்டியதில்லை. அவள் ஆயிரம் ஆயிரம் கிராமங்களைத் தானம் செய்திருக்கிருள். அவர் கள் யாவரும் அவளைப் புறக்கணிக்கமாட்டார்கள். மேலும் அவள் மிக்க வல்லமை பெற்றவள். தன்னையும், ஏன், தன் தாயையும் காப்பாற்ற வல்லமை உடையவள். ஆகை யால் தான் இங்கு இருப்பது அவசியமில்லை, மற்றும் தனக்கு ஒரு பெரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தான் இராமனையே நம்பி வாழ்பவன். இராமன் வனத்தில் பல கஷ்டங்கள் அனுபவிக்க நேரிடும். தன் பணி அவனை

எவ்வித இடையூறுமின்றி காப்பதே. அன்றுடம் அவனுக்கும் சீதைக்கும் உணவு கொண்டுவரவும், மற்றும் கானக வாழ்க்கையைக் கவலையின்றி நடத்தவும், தான் இருத்தல் அவசியம். இப்பணியே தான் விரும்புவது என்று விளக்கினுன். இராமனும் களிகூர்ந்து அவனைத் தன்னுடன் அழைத்துச் செல்லச் சம்மதித்தான். பின்பு தனக்குச் சொந்தமான வில், அம்பு இவைகளைக் கொணரும்படி சொன்னுன்.

இலட்சுமணன் மிகவும் சந்தோஷமடைந்து, தன் நண்பர்களை அணுகி அவர்களிடம் விடைபெற்றுகொண்டான். தனது மனைவி ஊர்மிளையை அழைத்துக்கொள்ளவில்லை. இராமன், சீதை இவர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் தான் வனம் போவது. தானும் மனைவியுடன் இருந்தால், தனது கடமைகளைச் சரிவர கவனிக்க முடியாதெனக் கருதியே, இலட்சுமணன் இத்தகைய தியாகம் செய்தான்.

பின்னர் இவ்விரு சகோதரர்களும் ஒரு முக்கிய காரியத்தில் ஈடுபட்டனர். அரண்மனையில் குழுமியிருந்த ஜனங்களுக்கும், புரோகிதர்கள், அந்தணர்கள் ஏழை எளியவர்கள் ஏனையோர்க்கும் தங்களது பொக்கிஷங்களை அள்ளி வழங்கினர். முதலில் சீதையுடன் அவர்கட்கு அஞ்சலி செய்து, சுயக்ஞருக்கு ஏராளமான பொன், ரத்தினங்கள் கொடுத்தார்கள். சீதாதேவியும் பின்வாங்கவில்லை. அம்முனிவரின் மனைவிக்குத் தன் நகைகள் யாவையும் கொடுத்தாள்.

ரத்தினங்களால் செய்யப்பட்ட மஞ்சத்தையும் கொடுத்தாய்விட்டது. இதைத் தவிர, யானைகள், குதிரைகள், பசுக்கள் பெருமளவில் அங்கிருப்போருக்கு அளிக்கப்பட்டன. கௌசல்யையின் பணியாளருக்கும், தசரத மன்னனின் சாரதிக்கும் அவைகளில் பங்கு உண்டு.

பின்னர் கண்ணும் கண்ணீருமாயிருக்கும் தனது வேலைக்காரர்களுக்கு, தான் திரும்பி வருமளவும் ஜீவனத்தைக் கஷ்டமின்றி நடத்த வகை செய்தான். தன்னுடைய மாளிகையையும் இலட்சுமணனுடைய கிரகத்தையும், பூட்டிவைக்காமல், காத்திருக்க ஏற்பாடு செய்தான். எல்லோருக்கும் செல்வம் பங்கிடு செய்யப்பட்டது.

யாவும் முடியும் தருவாயில் பரம ஏழையான திரிஜடன் எனும் கிழவர் அங்கு தோன்றினார். தனமற்றவர். ஆனால் புத்திரப்பேறு மிக்க உடையவர். தினந்தோறும் காட்டிற்குச் சென்று தானியங்களைப் பொறுக்கி, அன்றாட ஜீவனத்தை நடத்தி வந்தார். அவர் மனைவி சலிப்படைந்தவளாய், தன் கணவனைக் கூப்பிட்டு, 'இராமபிரான் அயோத்தியைவிட்டுச் செல்லுமுன், தன்னை அண்டினவர்களுக்குச் செல்வத்தை அள்ளிக்கொடுக்கிறான். நீங்களும் போய்க் கொஞ்சம் வாங்கிக்கொண்டு வாருங்கள்.' என்று கேட்டுக்கொண்டாள். கிழவரும் சம்மதித்தார். நேரே இராமன் மாளிகையை அடைந்தார். அவருடைய தோற்றத்தைக் கண்டவர்கள் அவரை உடனே உள்ளே போக அனுமதித்தார்கள்.

இராமனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். இராமனிடம் உள்ளவை யாவையும் கொடுத்தாய் விட்டன. எனினும் பசுக்கூட்டம் இருந்தது. அதைக் கொடுக்கச் சம்மதித்தான். கிழவர் ஒரு தடியை வீச வேண்டியது. அது எவ்வளவு தூரம் போகுமோ அது வரை உள்ள பசுக்களை அவர் அடையலாம் என்றான். கிழவரும் தமது கந்தைத் துணியை இறுகக் கட்டி, முழுப் பலத்துடன் தடியை வீசி எறிந்தார். அது ஸரயூ நதிக்கரை வரை போயிற்று. பல ஆயிரம் பசுக்கள் அவர் வசமாயின. உடனே இடையர்களை வரவழைத்து, அவைகளை அவர்

143784.

ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்ல இராமனே ஏற்பாடு செய்தான்.

இராமனுக்கு ஒரு சங்கை ஏற்பட்டது. தான் ஒரு வேளை பரிகாசம் செய்ததாக அவர் கருதுவாரோ என்று எண்ணி, அவரைக் கூப்பிட்டுச் சமாதானம் சொன்னான். "நான் உங்களை அவமானப்படுத்தவில்லை. தவத்தினால் தேகமெலிவு பெற்றவராயினும், தேகபலம் குன்றவில்லை என்று ஏனையோர் தெரிந்துகொள்வதற்காக, நான் உமக்கு இந்த பந்தயம் ஏற்படுத்தினேன். வேறு ஒன்றும் நான் கருதவில்லை. மேலும் எனக்கு மட்டும் ஒன்று உறுதியாக உளது. அதென்னவென்றால், என்னுடைய தனம் தங்கள் போன்றவர்களுக்குக் கொடுப்பதற்காகவே ஏற்பட்டது. அப்படிக் கொடுப்பதன் மூலம் தான் எனக்கு மன மகிழ்ச்சி ஏற்படும்" என்றான். பிறகு கிழவர் விடை பெற்றுக்கொண்டு தம் இருப்பிடம் சென்றார். அவர் குடும்பம் இராமனை வாயார வாழ்த்திற்று.

பிறகு இராமன் தன் மனைவி, சகோதரனுடன் அரசனைப் பார்த்து விடைபெற்றுக்கொண்டுவரச் சென்றான். ஜனக் கூட்டம் தாங்கவில்லை. யாவரும் துக்கமே உருவாகக் கொண்டிருந்தனர். "ஆ! என்ன கஷ்டம். சதுரங்க சேனையுடன் வெளிவருபவன், இன்று தரையில் நடந்து செல்கின்றனனே. மன்னன் மதியீனம் என்னே!" என்றெல்லாம் பிரலாபித்தனர்.

மேலும், "சீதையை இதுவரையிலும் ஆகாயத்திலுள்ளோர்கூட பார்க்க முடியாமல் இருந்தது. இன்றோ பாமர ஜனங்கள் நடுவில் நடமாடும்படி ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமா? வாசனாலங்காரங்களுடன் விளங்கியவள், இனிமேல் மழை, வெயில், குளிர் இவைகளால் பாதிக்கப்பட்டு, ஒளி மங்கிவிடுவாள். அருங்

குணங்கள் படைத்த இவர்களுக்கு வனவாசம்தான் ஏற்பட வேண்டுமோ? மன்னனுக்கு இப்படியும் மதி கெட்டுப்போமோ? ஆனால் இராமனுக்கு ஏற்பட்ட கஷ்டம் பாமர ஜனங்களையும் பாதிக்கவல்லது. புஷ்பங்கள், காய் கனிகள் உள்ள மரமானது வேரின்றிக் கீழே விழுந்தால், அவைகளின் கதி என்ன? அதேபோல், இராமன் கானக வாழ்க்கையை ஏற்றுக்கொண்டதால், நாமும் நமது மனை தோட்டம் இவைகளை விட்டு மனைவிமார் களுடனும், சுற்றத்தார்களுடனும், நமது ஐசுவரியம் யாவையும் துறந்துவிட்டு, இராமனைப் பின்பற்றுவது நலம். பாழடைந்ததும், எலிகள் குடிகொண்டதுமான, நமது வீடுகளை உடைய நாட்டையே கைகேயி அரசு செலுத் தட்டும். நாடே காடாகட்டும். காட்டிலிருக்கும் விஷ ஜந்துக்கள் இங்கு குடியேறட்டும்.'' என்றெல்லாம் ஜனங் கள் புலம்பினார்கள்.

இராமன் செவியிலும் இவை விழுந்தன. ஆனால் இராமன் சிறிதும் கலக்கமடையாமல், தன் இயற்கைப் புன்சிரிப்புடன் ஜனங்களைத் தாண்டிச்சென்று, தன் தந்தை இருக்குமிடம் ஏகினான்.

துயரக் கடலில் மூழ்கியிருக்கும் தசரத மன்னன். இராமனைச் சந்திக்கு முன் தன் மனைவிமார்கள் யாவரை யும் வரவழைத்தான். இராமனை வெகு தூரத்தில் கண்ட தும், அரசன் எழுந்து அவன் பக்கம் விரைந்தோடினான். தடால் என்று கீழே விழுந்துவிட்டான். இராமனும் இலட்சுமணனும் உடனே தூக்கிப் பிடித்தனர். உட்கார வைத்தனர். அவ்வமயம் எங்கும் அழுகைக்குரலே கேட் டது. கானகம் செல்ல சீக்கிரமாக விடைகொடுக்குமாறு இராமன் தந்தையை வேண்டினான். மன்னன் சம்மதிக்க வில்லை, அன்று இரவு மட்டும் அங்கு இருக்குமாறு

வேண்டினன். கதறினன். "நீ காட்டுக்குச் செல்வதை நான் விரும்பவில்லை. கைகேயி என்னை வஞ்சித்துவிட்டாள்" என்று புலம்பினன். ஆனல் இராமன் சம்மதிக்கவில்லை. அரசன் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமென்ருன். மீண்டும் ஒரு முக்கியமான தனது கொள்கையையும் வெளியிட்டான். "எனக்கு ராஜ்ய சுகபோகங்களில் என்றும் நாட்டமில்லை. சீதையினிடமும் எனக்கு பற்றுதல் கிடையாது. இன்ப வாழ்க்கை என்னைக் கவரவில்லை. சுவர்க்க வாசத்தையும் நான் விரும்பவில்லை. ஏன், எனக்கு ஜீவித்திருப்பதிலும் ஆசை கிடையாது. ஒன்றில் மட்டும் எனக்கு மிக்க அக்கறை உண்டு. என் தகப்பனராகிய நீங்கள் சொன்ன சொல் தவறக்கூடாது. அதற்காக நான் எதையும் தியாகம் செய்ய முனைந்துள்ளேன். தேவலோகத்திலும் தந்தை சொல்லுக்குத் தனயன் கட்டுப்பட்டவனுக இருக்க வேண்டியிருக்கிறது. மானிடலோகத்தில் கேட்கவேண்டுமோ? ஆகையால் நான் உடனே காட்டுக்குச் செல்வதுதான் நியாயம். மேலும் எங்களுக்கு வனத்தில் யாதொருவித கஷ்டமும் ஏற்படாது. வன வாழ்வே எங்களுக்குச் சுக வாழ்வாக அமையும். ஆகையால் கவலையற்றிருங்கள். நாங்கள் பதினன்கு வருஷத்திற்குப் பிறகு வந்து சேருகிறேம்." என்று இறுதியாக உரைத்தான். மன்னனும் இனி தடுப்பதில் பிரயோசனமில்லை என்று ஒருவாறு முடிவு செய்துகொண்டான். மகனை அணைந்து கொண்டான். பெண்கள் யாவரும் கதறினர்கள். சுமந்திரனும் துக்க மேலீட்டால் மூர்ச்சை அடைந்தான்.

பிறகு சுமந்திரன் கோபாவேசம் கொண்டான். அரண்மனை ஊழியன் எனினும், அக்கிரமம் புரியும் கைகேயியைப் பார்க்கச் சகிக்கவில்லை. அவளை வெகுவாகத் திட்டினன். ஒரு ரகசியத்தையும் சொன்னன். அது கைகேயியின் தாயாரைப் பற்றியது. முன்பு கேகய அரசனுக்கு ஒரு

மகான், ஈ எறும்பு போன்ற ஜந்துக்களின் பேச்சுக்களைப் புரிந்துகொள்ளும் சக்தியை அளித்தார். ஆனால் ஒரு நிபந்தனை. அப் பேச்சை யாவரிடமாவது சொன்னால், மன்னன் உடனே மரணமடைவான். மன்னன் ஒரு நாள் சில எறும்புக் கூட்டங்களைக் கவனித்து வந்தான். திடீரென்று சிரித்தான். பக்கத்திலிருக்கும் மனைவி (கைகேயியின் தாயார்) ஏதோ தன்னைப் பரிகாசம் செய்கிறான் என்று எண்ணி, அதன் காரணத்தை வினவினாள். எறும்புகள் என்ன சொல்லின என்பதைத் தனக்கு விளக்குமாறு வற்புறுத்தினாள். அதனால் தன் கணவனுக்கு ஏற்படவிருக்கும் பேராபத்தை உணரவில்லை. அரசன் உடனே தனக்கு உபதேசம் செய்வித்த மகானிடம் போய் என்ன செய்வது என்று கேட்டான். ‘வேறு வழியில்லை. உன் மனைவியை உடனே தேசத்தைவிட்டுத் துரத்திவிடு’ என்று கட்டளையிட்டார் மகான். உலகத்தில் ஒரு வசனம் உண்டு. பெண்கள் தாயின் குணத்தைப் பின் பற்றுபவர்கள். பிள்ளைகளோ தகப்பனின் குணத்தை சுவீகரிப்பவர்கள். கைகேயி விஷயத்தில் இவ் வசனம் பொய்யாகவில்லை. அரச வம்சத்தில் மூத்தவனுக்கே அரசுரிமை வழங்கப்பட்டு வருகிறது. அக் குலதர்மத்தை அவமதித்து விட்டாள் கைகேயி என்றெல்லாம் சொன்னான் சுமந்திரன். ஆனால் கைகேயி சிறிதும் சட்டை செய்யவில்லை; வெட்கமும் அடையவில்லை. பிறகு அவளையும் கதிகலங்கும்படியாக ஒரு சம்பவம் நடந்தது.

இராமன் காட்டுக்குச் செல்வதாக நிச்சயம் செய்தபின், மன்னன் சுமந்திரனுக்கு ஓர் உத்தரவு பிறப்பித்தான். அயோத்தியிலிருக்கும் யாவரையும் இராமனுடன் அனுப்பவேண்டும். சதுரங்க சேனைகள், தனதான்யங்கள், யாவையும் அனுப்புவதுடன் பொதுமக்களையும் அங்கு குடியேறுமாறு ஏற்பாடு செய்யச்சொன்னான்.

இதைக் கேட்டதும் கைகேயி சிறிதும் வெட்கமின்றி, "இது அநியாயம். பரதனுக்குப் பாழடைந்த ராஜ்யமா?" என்று கூக்குரலிட்டாள். அரசனைப் பார்த்து, "முன்னர் உம் மூதாதையான சகரன் என்பவன் தனது மகன் அசமஞ்சனைக் காட்டுக்குத் துரத்தினன். ஆனல் அவனுக்கு அங்கு தனியாக சலுகை ஒன்றும் காட்டவில்லை. அதை நீர் பின் பற்றவேண்டும்" என்ருள்.

இதைக் கேட்டதும் அங்கிருந்தோர் யாவரும் கோபாவேசம் கொண்டார்கள். "அசமஞ்சன் ஊரிலுள்ள குழந்தைகளைக் கொலை செய்தவன். அதற்காக நாடு கடத்தப்பட்டவன். அவனை இராமனுடன் சேர்ப்பதா? இதென்ன விபரீதம்! சந்திரன்போல் களங்கமற்ற இராமனுக்கும் அவனுக்கும் எவ்வளவு தூரம்!" என்ருன் சித்தார்த்தன் எனும் மந்திரி.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இராமன் உடனே தனது அபிப்ராயத்தைத் தெரிவித்தான். "அரசே! இது என்ன விபரீதம்? யான் எப்பொழுது வனவாசத்தை மேற்கொண்டேனே, அப்பொழுதே எல்லாவித சுகபோகங்களையும் துறந்தவன் ஆனேன். ஒரு பெரிய யானையைத் தானம் செய்த பிறகு, அதைக் கட்டியிருக்கும் கயிற்றைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்வதுபோல் அல்லவா இருக்கிறது! எனக்குச் சேனை, பொக்கிஷம் எதற்காக? பரதனுக்கல்லவா அவை உரித்தானவை? எனக்குத் தற்சமயம் வேண்டியவை மரவுரிகளும் காய் கிழங்கு எடுப்பதற்கு வேண்டிய மண்வெட்டியும்தான்" என்ருன்.

கைகேயிக்கு இவ் வார்த்தைகள் மிக்க சந்தோஷத்தைக் கொடுத்தன. உடன் சென்று தானே மரவுரிகளைக் கொணர்ந்தாள். இராமனை உடுத்திக்கொள்ளுமாறு சொன்னள். அவனும் தயங்கவில்லை. தனது வஸ்திரங்களைக்

கழற்றி எறிந்துவிட்டு, ஏதோ வெகு நாளாகப்பழகியவன் போல் மரவுரிகளை உடுத்தான். இலட்சுமணனும் பின் பற்றினன்.

சீதையும் அதைத் தரிக்க வேண்டி, சிறிது நேரம் அதைப் பார்த்தவண்ணமிருந்தாள். அவைகளை எப்படி உடுத்திக்கொள்வது என்று கவலைப்பட்டாள். ஒன்றை எடுத்துக் கழுத்தில் சுற்றிக்கொண்டாள். மற்றொன்றைக் கையால் பிடித்துக்கொண்டாள். இராமன் அதை வாங்கி அவள் வஸ்திரத்திற்கு மேல் அணிவித்தான். இதைப் பார்த்த அங்குள்ள பெண்கள் யாவரும் ஓவென்று அலறி விட்டனர். 'இராமனுக்கன்றோ வனவாசம்? சீதை மரவுரி தரித்துக்கொள்ளல் என்ன நியாயம்? அவள் அயோத்தி யில் அல்லவா இருக்கவேண்டும்?' என்று பலவிதமாக முறையிட்டனர். கைகேயி மட்டும் உணர்ச்சியற்றவளா யிருந்தாள்.

அச் சமயத்தில் மகா முனிவர் வசிட்டருக்குப் பெருங் கோபம் ஏற்பட்டது. கைகேயியைப் பார்த்து, "சீதை மரவுரி தரிக்க நியாயம் இல்லை. நீ அரச குலத்தைக் கெடுத்துவிட்டாய். மோசம் செய்துவிட்டாய். மேலும் மேலும் அக்கிரமம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறாய். சீதை வனம்போக நியாயமில்லை. இராமன் துறந்த அரசை அவளே அடைய உரியவள். மனைவி புருஷனுடைய ஆத்மா என்கிறது மறை. சீதை இராமனின் ஆத்மா. ஆதலின், அவளே அரசுக்குரியவள். மேலும் அவள் காடு சென்றால், நாங்கள் எல்லோரும் பின் செல்வோம். இராமன் இல்லை என்றால் ராஜ்யம் இல்லை. இராமன் இருக்குமிடம்தான் அயோத்தி. பாமர ஜனங்களும் இராம னைப் பின்தொடர்வார்கள். ஏன், பரத சத்ருக்கனரும் இராமனைத்தான் பின்தொடர்வார்கள். இதில் ஐயமில்லை." என்றார்.

பின்னர் சீதை மரவுரி உடுத்துவதைத் தடுத்துவிட்டார். சீதைக்கோவெனில் இராமன் மரவுரி உடுத்தியதால், தானும் அவ்விதமே செய்ய வேண்டும் என்று அவா. ஜனங்கள் அரசனை நிந்தித்தனர். தசரதன் மீண்டும் கைகேயியைப் பார்த்து, "சீதை வனம் புகுதல் அடாத காரியம். அவள் சுகவாழ்வுக்கே ஏற்பட்டவள். அவள் உனக்கு என்ன இங்கு புரிந்தாள்?" என்று வினவினான். மூங்கில் மரத்தை அதன் புஷ்பமே கொளுத்துவதுபோல, தனது பிரதிக்கினை தன்னையே வாட்டுகிறதே என்று ஏங்கினான். அவன் துக்கத்திற்கு முடிவு ஏற்படவில்லை.

இராமன் தந்தையை அணுகி, தான் வனம் சென்றதும் தன் தாயைச் சரிவர காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டான். மன்னன் மீண்டும் துக்கத்திலாழ்ந்தான். சிறிது நேரம் சிந்தித்தவண்ணமிருந்தான். இப் பெருந் துக்கத்திற்குத் தான் செய்த முன்வினைப் பயன்தான் காரணம் என்று ஊகித்தான். அவ் வினையைச் சரீரமுள்ளளவும் முழுமையும் அனுபவித்தே தீரவேண்டும் என்று ஒருவாறு தேற்றிக் கொண்டான்.

பின்னர் உயர்ந்த குதிரைகள் பூட்டின ஒரு ரதத்தைக் கொண்டுவரச் சொன்னான். தனது நிதி மந்திரி தனாத்யக்ஷனைக் கூப்பிட்டு, தனது அரண்மனையிலிருந்து, பதினான்கு ஆண்டுகளுக்குப் போதுமான விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டான். அவை வந்ததும், சீதையை அலங்கரித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். சீதை அப்படியே செய்துகொண்டாள். உதயகால சூரியன்போல் விளங்கினாள். கௌசல்யை சீதையை அணுகி, சில புத்திமதிகள் சொன்னாள்.

பிறகு இராமன் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டான். தாயைத் தேற்றினான். பதினான்கு ஆண்டு

ஒரு நொடிப்பொழுதில் கழிந்துவிடும். என்றும் மன்னனைப் பார்த்துக்கொள்ளும்படியும் சொன்னாள். மற்றைய தாய் மார்களுக்கும் அஞ்சலி செய்து, தான் அவர்களை எப் பொழுதாவது கோபித்திருந்தால் தன்னை மன்னித்துவிடு மாறு கேட்டுக் கொண்டான். அவர்கள் அலறிவிட்டனர். எப்பொழுதும் உயரிய சங்கீத நாதம் கேட்கும் அரண்மனை யில் அன்று விசனக் குரலும், துக்கக் குரலும் வியாபித் திருந்தன.

இராமன் தன் தாயாருக்கு அஞ்சலி செய்தான். இலட்சுமணனும் அவ்விதம் செய்தான். பிறகு தன் தாயான சுமித்ராதேவியை அணுகினான். அம் மாதரசி இதுவரை நடைபெற்ற விஷயங்களைக் கண்டு கலங்க வில்லை. இலட்சுமணனைப் பார்த்து, "குழந்தாய், நீ இராம னுக்குப் பணி செய்தற்கென ஏற்பட்டவன். நீ ஆரணி யத்தில் இராமனைக் கண்ணும் கருத்துமாகக் காக்க வேண்டும். இராமனுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட தசைக்கு நீதான் உற்ற துணைவன். இது தர்மத்தையும் ஒத்திருக் கிறது. தானம் செய்வது, வேள்வி நடத்துவது, யுத்தத்தில் உயிரை விடுவது, மூத்த சகோதரனுக்கு இளையவன் பணி விடை செய்வது, இவையெல்லாம் உன் குலதர்மங்கள். ஆகையால் நீ ஆரணியம் போய்த்தான் ஆகவேண்டும். அங்கு இராமனை உன் தந்தை தசரதன்போல் பாவிப்பாய். சீதாதேவியை உன் தாய்போலக் கருதுவாய். வனத்தை அயோத்தியைப்போல் நினைத்துக்கொள்" என்று சொன்னாள்.

பிறகு அம் மூவரும் வெகு உற்சாகத்துடன் ரதம் ஏறினர். சுமந்திரன் ஓட்டினான். இராமன் செல்வதைக் காண அயோத்திவாசிகள் யாவரும் துக்கத்தில் மூழ்கிவிட் டனர். மிருகங்களும் உணர்ச்சி வசப்பட்டன. கோடைக்

காலத்தில் வெயிலில் தவிக்கும்பொழுது ஜலமட்டத்தைக் காண ஓடுவதுபோல், குழந்தைகள், கிழவர்கள் யாவரும் இராமன் போகும் பாதையில் விரைந்து ஓடினர். ரதத்தை மெல்ல ஓட்டுமாறு சுமந்திரனைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் இராமன் இவர்கள் துக்கத்தைக் காணச் சகியாமல், ரதத்தை வேகமாக ஓட்டும்படி சொன்னான். எங்கும் விசனமும் கண்ணீரும் தென்பட்டன. அரசனும் எழுந்து சென்று இராமன் போகும் பாதையை தன் மனைவிகளுடன் பின்தொடர்ந்தான். இவர்கள் ஓடி வருவதைப் பார்த்த இராமன் மிகவும் மனவருத்தமடைந்து சாரதியை வேகமாக ஓட்டுமாறு உத்தரவிட்டான். பிறகு ஜனங்கள் இராமனுக்கு அஞ்சலி செய்து திரும்பிவந்தனர். ஆனால் அவர்கள் மனது இராமனிடந்தான் லயித்திருந்தது. மன்னன் ஒரு நியதியின்பேரில் தொடர்ந்து செல்வதை நிறுத்திவிட்டுத் தனது மனைவிகளுடன் திரும்பிவிட்டான்.

ஹெலன் கெல்லர்

கே. கே. துக்கால்

மிஸ் கெல்லர் பிப்ரவரி 20-ந் தேதி இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார். இந்தியா, பர்மா, பாகிஸ்தான், பிலிப்பைன் ஆகிய நாடுகளில் நான்கு மாதங்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார். இது நாற்பதினுயிரம் மைல் சுற்றுப் பிரயாணம். வெளிநாட்டு அந்தகருக்காக ஏற்பட்டுள்ள அமெரிக்க தர்ம ஸ்தாபனமும் அவர் சுற்றுப்பிரயாண நாடுகளின் அரசாங்கங்களும் இவரது சுற்றுப்பிரயாணத்துக்கு உதவி அளிக்கின்றன.

ஹெலன் கெல்லருக்கு வயது எழுபத்து நான்கு. குழந்தைப் பருவம் முதல் அந்த அம்மையாருக்குக் கண் தெரியாது, காது கேளாது, பேச முடியாது. ஆயினும் அவர் இம்மூன்று இடர்ப்பாடுகளையும் வென்று உலக முழுவதிலும் பார்வை உள்ளவர்களுக்கும் பார்வை இல்லாதவர்களுக்கும் ஊக்கமூட்டக்கூடியவராகிவிட்டார்.

உடற் குறையுள்ள லக்ஷக்கணக்கான மக்களுக்கு ஊக்கமூட்டுபவராக விளங்கும் கண் தெரியாத இப் பெண் மணி, இதற்கு முன் ஐந்து முறை உலகத்தைச் சுற்றி வந்திருக்கிறார். கண் தெரியாதவர்களுடைய கஷ்டங்களை மக்கள் உணர்ந்து உதவி செய்ய ஊக்கமூட்டுவதற்காக அவர் இவ்வாறு சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். இந்தப் பிரயாணத்தில் அவர் கண் தெரியாதவர்களுக்காகச் செய்யப்படும் காரியங்களைப் பார்வையிடுவார்; தொண்டர்,

வணிகர், உத்தியோகஸ்தர் கூட்டங்களில் பேசுவார்; பெண்கள் சங்கங்களிலும், மத சம்பந்தமான சங்கங்களிலும்; சர்வகலாசாலைகளிலும் அவர் பேசுவார்.

கண் தெரியாதவர்களுக்கும் காது கேளாதவர்களுக்கும் முழு வாழ்வு பெறும் உரிமை கிடைப்பதற்காக உழைப்பதே அவரது வாழ்க்கையின் நோக்கம். அவரது எழுத்தையும் பேச்சையும் விட அவரது வாழ்க்கையே முக்கியமானது. தொட்டுப் பார்த்து அவர் வாசிக்கப் படித்ததும், நண்பர்களுடைய கண்களின் துணையால் அவர் 'பார்க்கும்' பயிற்சி பெற்றதும், சங்கீதம், சத்தம், நாட்டியம், அசைவு இவற்றை அவர் 'உணர'ப் படித்ததும் முக்கியமானவை. தவிர்க்க முடியாத இயற்கையான இடர்ப்பாடுகளை மேற்கொள்ளும் ஆற்றல் மனிதனுடைய உள்ளத்திற்கு உண்டு என்பதற்கு அவர் சிறந்த உதாரணமாக இருக்கிறார்.

1880, ஜூன் 27-ஆம் தேதியில் அலபாமாவில் டஸ்கம்பியாவிலுள்ள ஒரு தோட்டத்தில் அமெரிக்க வரலாற்றில் சிறப்புற்று விளங்கும் ஒரு குடும்பத்தில் மிஸ் ஹெலன் கெல்லர் பிறந்தார். அவரது தந்தையார் அமெரிக்க உள்நாட்டுப் போரில் (1865–69) தென் பகுதிப் படையில் தலைவனாக இருந்தார். அவர் ஒரு பத்திரிகை ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். ஹெலன் நல்ல உடல் நலமுள்ள குழந்தையாக இருந்தார்; அசாதாரணமான அறிவு படைத்தவராகவும் விளங்கினார். ஆறு மாதத்தில் அவர் பேசினார். ஒரு வயதானதும் அவர் நடந்தார். அவர் பத்தொன்பது மாதக் குழந்தையாயிருந்தபொழுது, அவருக்கு மிகக் கடுமையான காய்ச்சல் ஒன்று வந்தது; அதனால் அவர் பார்வையிழந்தார்; கேட்க முடியாதவருமானார். சாதாரண முறைபற்றி அவர் படிக்கக்கூடாதவரானார். ஆதலால் அவர் நாகரிகமற்ற குழந்தையாக வளர்ந்தார். அவர் தமக்கு

வேண்டியதை சைகை காட்டிக் கேட்பார்; அவர் கேட்டதை அவரது பெற்றோர் கொடுக்காவிட்டால், மிகவும் கோபங் கொள்வார்.

அவருக்கு வயது ஆறு ஆயிற்று. பாஸ்டனில் பெர்க் கின்ஸ் நிலையம் என்னும் கண் தெரியாதவர் பாடசாலையில் ஆசிரியராயிருந்த மிஸ் ஆனி சல்லிவன் என்னும் பெண் மணி ஹெலனுக்கு ஆசிரியையாக நியமிக்கப்பட்டார்.

மிஸ் ஹெலன் கெல்லர் தாம் முதன் முதல் தம் ஆசிரியை யைக் கண்டதைத் தமது வாழ்க்கையின் மிகவும் முக்கிய மான நிகழ்ச்சி என்று சொல்லுகிறார். மிஸ் ஹெலன் கெல்லர் "என் வாழ்க்கை வரலாறு" என்னும் நூலில் தமது ஆசிரியை முதன் முதல் தம் வீட்டுக்கு வந்ததைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார் :

வாழ்வளிக்க வந்தவர்

"எனக்கு ஏழு வயதாவதற்கு மூன்று மாதத்திற்கு முன், 1887-ஆம் ஆண்டு மார்ச் 3-ந் தேதி பிற்பகலில் நான் யாதோ ஒன்றை எதிர்பார்த்தவளாக வீட்டின் முன் கூடத் தில் அமைதியாய் நின்றுகொண்டிருந்தேன். கைகளால் என் தாயார் எனக்கு உணர்த்தியதைக் கொண்டும் அங்குமிங் கும் அவசர அவசரமாய் அவர் நடந்துகொண்டிருந்ததைக் கொண்டும் யாதோ அசாதாரணமான ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்று நான் ஊகிக்கலானேன். ஆதலால் நான் வாசலுக்குப் போய்ப் படியில் நின்று காத்துக்கொண் டிருந்தேன்.

"யாரோ எனக்கு நேரே நடந்து வருவது தெரிந்தது. அது என் தாயார் என்று நினைத்து என் கையை நீட்டி னேன். யாரோ ஒருவர் கையைப் பிடித்து அணைத்துக் கொண்டார். அவரே எல்லாவற்றையும் எனக்கு வெளிப்

படுத்த வந்தவர். எல்லாவற்றையும் விட அவரே என்னிடத்தில் அன்புகூர வந்தவர். 'எனக்கு ஒளி வேண்டும், ஒளி வேண்டும்' என்பதே என் உள்ளத்திநின்று சொல்லின்றிப் பிறந்த குரல். அந்த நேரத்திலேயே வாழ்க்கையின் ஒளி என்மீது வீசலாயிற்று."

ஹெலன், முகம் வெளிறிய பலவீனமான பயங்கொள்ளிப் பெண் அல்ல என்றும், உடல் உரமும் உடல் நலனும் உள்ளவள் என்றும், குதிரைக் குட்டிபோல் துள்ளி விளையாடுபவள் என்றும் மிஸ் சல்லிவன் கண்டு ஆச்சரியமடைந்தார். முதல் நாளிலேயே மிஸ் சல்லிவன் ஹெலனின் கையில் எழுத்துக்களை உணர்த்தத் தொடங்கினர்.

"என் ஆசிரியை என்னை ஓர் அறைக்குள் கூட்டிக் கொண்டுபோய் எனக்கு ஒரு பொம்மையைத் தந்தார். நான் சிறிது நேரம் அதை வைத்துவிளையாடினேன். அதன் பின் அவர் மெல்ல என் கையில் D-O-L-L என்னும் எழுத்துக்களைக் காட்டினர். உடனே அந்த விரல் விளையாட்டு எனக்கு மிகவும் விருப்பமாயிற்று; நானும் அவ்வாறே செய்ய முயன்றேன்."

சில மாதங்களில் எண்ணூறு சொற்களைப் படித்துவிட்டார். அவற்றை எழுதினர்; புரேய்ல் எழுத்திலும் எழுதினர். அறிவு பெற இவருக்கு இருந்த ஆசைக்கு ஓர் அளவே இல்லை. அவர் ஆச்சரியமான முன்னேற்றமடைந்தார். மிஸ் சல்லிவன் தம் நண்பர் ஒருவருக்குப் பின்வருமாறு எழுதினர்: "இந்தக் குழந்தைக்குக் கல்வியூட்டுவது என் வாழ்க்கையின் முக்கிய சம்பவமாக இருக்கும். அவள் விசேஷமான ஆற்றல் உள்ளவள்; நான் அதனை அபிவிருத்தி செய்ய முடியும் என்பது என் நம்பிக்கை."

வயது பத்தாயிற்று. நியூயார்க்கிலுள்ள ஊமையர் பாடசாலைக்குத் தலைமையாயிருந்த மிஸ் சேராபுள்ளரிடம்

படிக்கும்படி ஹெலனைக் கூட்டிக்கொண்டு போனார்கள். ஹெலனுக்கு ஒலியைப்பற்றி ஒன்றும் தெரியாததால், அவர் அல்லும் பகலும் ஒவ்வொரு சொல்லையும் மிகவும் வருந்திப் படிக்க வேண்டியதாயிற்று. அலபாமாவுக்குப் போகும் போது தம் சகோதரியிடம் தாம் ஊமை அல்ல என்று சொல்லிவிட வேண்டுமென்று அவர் எண்ணினார். அவ் வெண்ணம் அவருக்கு ஊக்கமூட்டியது.

கூட்டத்தில் பேசுகிறார்

பிற்காலத்தில் ஹெலன் கூட்டத்தில் பேசப் படித்துக் கொண்டார். பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு அவர் மூன்று ஆண்டுகள் பழகினார். அவர் தமது சத்தத்தை ஒரு நெறிப்படுத்த வேண்டியதாயிற்று.

அவர் லத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளைப் பயின்றார். பதினாறுவது வயதில் அவர் செயற்கரும் செய லொன்று செய்தார். அவர் அமெரிக்காவில் மஸாச் சூஸட்ஸிலுள்ள கேம்பிரிட்ஜில் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் பெண்டிர் பகுதியாகிய ராட்கிளிப் கல்லூரியில் சேர்ந்தார். எட்டு வருஷங்கள் அவர் பெரு முயற்சி செய்து படித்தார். அவருடைய ஆசிரியையும் அவரோடு கல்லூ ரிக்குச் சென்று விரிவுரைகளைக் கையில் எழுதிக் காட்ட வேண்டியதாயிற்று.

1904-ஆம் ஆண்டில் ஹெலன் படிப்பை முடித்துக் கலைப்பட்டம் பெற்றார். ஆங்கில மொழியில் அவர் பெற்றிருந்த புலமைக்காக அவர் விசேஷமாக கௌர விக்கப் பெற்றார். ராட்கிளிப்பில் அவர் இருந்த காலத்தில் இரண்டாவது வருஷத்தில் அவர் தமது முதல் புத்தகத்தை எழுதினார். "என் வாழ்க்கை வரலாறு" என்பது அதன் பெயர். அது தொடர்ச்சியாக அமெரிக்கப் பெண்டிர் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டது. அதனால் அவர்

உலகப் புகழ் பெற்ருர். அதுமுதல் பொதுவாழ்க்கையில் மிகவும் ஊக்கமூட்டும் ஒருவராகஅவர் விளங்குகிருர்.

வேறு பல நூல்களும் அவர் எழுதியிருக்கிருர். அமெரிக்காவில் உள்ள பத்திரிகைகள் பலவற்றிற்கு அவர் கட்டுரைகளும் எழுதியிருக்கிருர்.

புத்தகங்கள் எழுதும்போது அவர் மிகவும் வருந்தி உழைக்க வேண்டியதிருக்கிறது. அவர் சாதாரண டைப் ரைட்டரையாவது புரேய்ல் எழுத்து எழுதும் கருவியை யாவது பயன்படுத்துகிருர். அவர் விரைவாக எழுத முடியாது; அவர் தாம் எழுதியவற்றைத் திரும்பப் படிக்க முடியாது. அவரது தளராத முயற்சிக்கு ஓர் அளவே இல்லை.

கவிதையும் இலக்கியமும் சங்கீதமும் கலையும் அவருக்கு மிகவும் விருப்பம். அவர் சினிமாவுக்குப் போகிருர். அவ ரோடு செல்வோர் அவரது கையில் கதையை எழுதிக் காட்டுகின்றனர். இசையை ஒலி அதிர்ச்சிகளைக்கொண்டு அறிந்து அவர் இன்புறுகிருர். சிற்பங்களைக் கையால் தொட்டுப்பார்த்து அவர் மகிழ்கிருர். மார்க் டுவையினின் நகைச்சுவையை ஒலி அதிர்ச்சியால் அவர் உணர்ந்துகொண் டார். என்ரிக்கோ காருஸோவின் இனிய குரலை ஹெல னின் கைகள் உணர்ந்தன. ஜாஸ்கா ஹெய்பெட்ஸ் பிடில் மீட்டியபோது ஹெலன் அதில் தமது கையை வைத்து இசையின்பம் துய்த்தார். பியாஞேவில் கையை வைத்து அவர் மென்மையான அதிர்ச்சியையும் நுண்மையான இசையையும் அறிந்துகொள்கிருர். சென்ற ஆண்டு அவர் விரல் நுனியால் ஜனதிபதி ஐஸன்ஹவர் புன்னகை புரிந்ததைக் "கண்டார்."

தெய்வ நம்பிக்கை

குழந்தைப் பருவம் முதல் ஹெலன் கெல்லருக்கு பெர்னார்ட்ஷா, ரவீந்திரநாத் தாகுர், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்ற உலகப் பெரியார் பலரைத் தெரியும். ஜனாதிபதி குரேவர் கிளீவ்லன்ட் (1893–97) முதல் அவருக்குப் பின் வந்த ஜனாதிபதிகள் யாவரும் அவருக்குத் தெரியும்.

ஹெலன் கெல்லர் தெய்வ பக்தி உள்ளவர். தெய்வ நம்பிக்கை அவருக்கு உறுதுணையாய் விளங்குகிறது. தனிமையாய் அமைதியாயிருக்கும் பழக்கம் உள்ளவர்.

"அயர்வு தளர்வு அனைத்தையும் அகற்றுவது தெய்வ நம்பிக்கையே. நம்பிக்கை என்பது ஒரு காரியமன்று, இரண்டுமன்று, மூன்றுமன்று. எனக்கு ஊக்கமளிக்கும் நம்பிக்கைகள் அனைத்தும் ஒன்று திரண்ட ஒன்றே அது. அளவிறந்த அருளும் எல்லாம் உணர்ந்த அறிவும் படைத்த கடவுளிடம் நான் கொண்டுள்ள நம்பிக்கை வாழ்க்கையாகிய கடலில் நான் நடக்கத் துணை செய்கிறது."

ஹெலன் கெல்லரிடம் நற்பண்பும் நன்னோக்கமும் கடும் உழைப்பும் கமழ்கின்றன. இருள் நிறைந்த தம் வாழ்க்கையை அவர் இனியதாக்கியதுமன்றி, தம் அறிவாற்றலால் தம்மைப்போல் துயருற்று வருந்துவோருக்காக அவர் உழைக்கிறார்.

பின்வருவன அவரது நிலையைப் புலப்படுத்தும். "நல்ல நண்பர்களும் விருப்பமான வேலைகளும் எனக்குக் கிடைத்ததால் என் வாழ்க்கை இன்பம் நிறைந்ததாயிற்று. என் குறைபாடுகளைப் பற்றி நான் எண்ணுவதே இல்லை. அவற்றை நினைத்து நான் வருந்தியதே இல்லை. சிற்சில சமயங்களில் ஒருவிதமான ஆவல் சிறிது ஏற்படுவதுபோல தோன்றும்; ஆனால் அது பூக்களில் பட்ட காற்றுப்போல

அகன்றுவிடும். காற்று கடந்துபோகிறது; பூக்களோ திருப்தியாக இருக்கின்றன.''

கனக்டிக்கட் ராஜ்யத்தில் காட்டில் ஒரு நல்ல வீட்டில் அவர் குடியிருக்கிறார். வெட்ட வெளியில் ஒரு மூலையில் கல்தூணில் ஒரு ஜப்பான் விளக்கு ஒன்று நிற்கிறது; அது எப்பொழுதும் எரிந்துகொண்டேயிருக்கிறது. அவரது வாழ்நாளில் அது அணைந்துபோகாது. அது ஓர் அடையாள மாக அங்கு நிற்கிறது.

செய்திக் கோவை

பிரிட்டிஷ் கயானு

பிரிட்டிஷ் கயானுவில் மக்கள் முன்னேற்றக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. முன்னர் பிரதம மந்திரியாக இருந்த டாக்டர் ஜகனும் அவரது மனைவி ஜேனெட் ஜகனும் கட்சியை விட்டு வெளியேறி, புதுக் கட்சி அமைக்கப் போவதாக அறிவித்தனர். நீக்ரோ பாரிஸ்டரான பர்ன்ஹாம் மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

அணுசக்தி மின்சாரம்

பிரிட்டனில் பத்தாண்டுகளில் பன்னிரண்டு அணுசக்தி மின்சார நிலையங்களை நிர்மாணிக்கத் தற்காலிகத் திட்டம் ஒன்றைப் பிரிட்டிஷ் அரசாங்கம் இன்று அறிவித்தது. இதற்குச் சுமார் நானூறு கோடி ரூபாய் செலவாகும்.

இந்தப் பன்னிரண்டு நிலையங்களும் தொழில்களுக்குப் பயன்படக் கூடிய மின்சார விசையை 150 முதல் 200 கோடி வாட்ஸ் வரை ஓராண்டில் உற்பத்தி செய்யுமாம்.

சீனுவின் வடமேற்குப் பகுதியில் அணுசக்தி மின்சார நிலையங்கள் பல அமைக்கப்படுவதாக லண்டன் செய்தி ஒன்று கூறுகிறது.

நேரு—நாஸர் கூட்டறிக்கை

பிரதமர் நேரு, லண்டனிலிருந்து இந்தியா வரும் வழியில் கெய்ரோவில் தங்கினர். எகிப்து நாட்டின் பிரதமர் கர்னல் நாஸர், நேருவை வரவேற்று உபசரித்தார்.

இரண்டு பிரதமர்களும் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தான் சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும் என்றும், ராணுவ ஒப்பந்தங்களாலும் வல்லரசு கோஷ்டிகளில் சிக்கிக்கொள்வதாலும் கொந்தளிப்பும், தளவாட உற்பத்தியில் போட்டா போட்டியும் ஏற்படும் என்றும், இதனுல் ஒரு நாட்டின் பாதுகாப்பு அதிகரிக்காது என்றும் கூறியிருக்கின்றனர்.

ஜப்பானில் புயல்

ஜப்பானில் ஏற்பட்ட பெரும் புயலினுல் 38 கப்பல்கள் மூழ்கின வென்றும், பல வீடுகள் இடிந்தன வென்றும் 127 பேரைக் காணவில்லை என்றும் செய்தி கூறுகிறது.

ராணுவ ஒப்பந்தம்

இராக்கும் துருக்கியும் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. எகிப்து, சவூதி அரேபியா முதலிய அரபு நாடுகள் கடுமையாக ஆட்சேபித்தும் கூட இராக் இவ்வாறு செய்திருக்கிறது. அரபு நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்திலிருந்து இராக்கை விலக்குமாறு எகிப்து கோரும் என்றும் சொல்லப்படுகிறது.

"ஸீட்டோ"

எட்டு "ஸீட்டோ" நாடுகளின் அயல் நாட்டு மந்திரிகள் பாங்காக் நகரில் மகாநாடு கூடினர். தென்கிழக்கு ஆசிய தற்காப்பு ஒப்பந்தப் பிராந்தியத்தில், சமாதானத்துக்கும் பந்தோபஸ்துக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்துக்களைக் கருதி, பொதுத் தற்காப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயமுண்டாகிவிட்டது என்று அயல் நாட்டு மந்திரிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

'ஸீட்டோ' அயல் நாட்டு மந்திரிகள் ஆண்டுக்கு ஒரு முறை கூடுவார்கள். அவசியமானல் அடிக்கடி கூடுவார்கள். இந்த மந்திரிகள் கூடாத சமயங்களில், இவர்களிடையே நெருங்கிய கூட்டுறவை ஏற்படுத்துவதற்காக, பாங்காக்கில் அவர்களுடைய பிரதிநிதிகள் இருப்பார்கள். ஒவ்வொரு நாடும் ஒரு ராணுவ ஆலோசகரையும் அனுப்பும்.

'ஸீட்டோ' ஒப்பந்தத்தின் சில ராணுவ அம்சங்களை அமுல் செய்வதற்கான திட்டங்களை வகுக்க, மணிலாவில் ஏப்ரல் மாதத்தில் ராணுவத் திட்டக்காரர்கள் கூடுவர்.

கம்யூனிஸ்டு அல்லாத நாடுகள் தங்கள் படைகளை ஒரே இடத்தில் குவித்து வைக்காமல், இடம் விட்டு இடம் நகர வசதியாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க அரசாங்க மந்திரி டல்லஸ் கூறினர்.

ஏப்ரலில் நடைபெறப்போகும் ஆசிய ஆப்பிரிக்க மகா நாட்டுக்கு ஆசிச் செய்தி அனுப்ப 'ஸீட்டோ' பிரதிநிதிகள் தீர்மானித்தனர்.

ஜப்பானில் தேர்தல்

ஜப்பானியப் பார்லிமெண்டின் கீழ்ச் சபைக்கு நடந்த பொதுத் தேர்தல்களில் தற்போதைய பிரதமர் ஹடயாமாவின் புதிய ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றது. ஆனல் பிரதமரின் கட்சிக்குப் பூரண மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

467 பேர் கொண்ட சபையில், பிரதமரின் புதிய ஜனநாயகக் கட்சி 186. லிபரல்கள் 111. இடதுசாரி சோஷலிஸ்டு 89. வலதுசாரி சோஷலிஸ்டு 67. தொழிலாளர் குடியானவர் கட்சி 4. கம்யூனிஸ்டுகள் 2. சில்லரைக் கட்சிகளும் சுயேச்சையும் 8,

ஹைட்ரஜன் குண்டு

இந்தக் குண்டுகளில் ஒன்றை எங்காவது போட்டால், ஏழாயிரம் சதுரமைல் வரை சுற்றியுள்ள மக்கள் மடிந்து போவார்கள் என்று அமெரிக்க அணுசக்திக் கமிஷன் தலைவரின் அறிக்கை கூறுகிறது.

நவீன ஆயுதங்களை உபயோகித்து யுத்தம் நடத்ினால் அரைமணி நேரத்தில் எல்லாத் தரப்பினரும் அழிந்து விடுவர் என்று பிரிட்டிஷ் விஞ்ஞானி ஸர். பவல் கூறுகிறார். பத்து அல்லது இருபது ஹைட்ரஜன் குண்டுகளைப் போட்டால் பிரிட்டனில் மனித வாழ்க்கை அஸ்தமித்து விடுமாம்.

அமெரிக்காவிடம் நாலாயிரம் அணுக் குண்டுகளும், ருஷ்யாவிடம் ஆயிரம் அணுக் குண்டுகளும் இருப்பதாக அவர் மதிப்பிடுகிறார். ஹைட்.ரஜன் குண்டின் நாசத்திற்கு அளவே இல்லை என்றும், இருபது லட்சம் டன் வீரிய வெடி குண்டுக்கு ஈடான ஒரு ஹை-குண்டு ஏற்கெனவே வெடிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறுகிறார்.

கழுதைகளின் தொகை

சீனு, ருஷ்யா ஆகிய நாடுகள் நீங்கலாக, உலகத்தில் உள்ள மற்ற எல்லா நாடுகளிலுமாக மூன்று கோடியே முப்பத்து நான்கு லட்சம் கழுதைகள் இருக்கின்றன வென்று ஐக்கிய நாடுகள் சங்க வருஷப் புத்தகத்தில் ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

அரசியல் அகதிகள்

கம்யூனிஸ்டு சீன அரசியல் அகதிகள் ஆறு லட்சத்து எழுபதாயிரம் பேர் பிரிட்டிஷார் வசமுள்ள ஹாங்காங்கில் தங்கியிருப்பதாகவும், இவர்களில் பல ஆயிரம் பேரை

பார்மோஸாவுக்கு அனுப்ப வேண்டும் என்று கருதுவதாக வும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதி கமிஷன் கூறுகிறது.

இனபேதமற்ற தொழிற் சங்கம்

தென்னுப்பிரிக்காவில் இனபேதமற்ற ஒரு தொழிற் சங்கம் புதிதாக அமைக்கப் பெற்றிருக்கிறது. இதில் இப்பொழுது 42000 பேர் சேர்ந்திருக்கின்றனர். இந்த ஸ்தாபனம் அரசியலில் பிரவேசிக்கவும் உத்தேசித் திருக்கிறது.

இந்தியா—போலந்து

கம்யூனிஸ்டு போலந்தும் இந்தியாவும் வர்த்தக ஒப் பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. அதன்படி இரும்புத் தாது, மைக்கா, தோல், காபி முதலிய பண்டங்களை இந்தியா ஏற்றுமதி செய்யும். யந்திரங்கள், தொழிற் சாதனங்கள், ரசாயனப் பொருள்கள், ரயில் பெட்டிகள், ஜவுளி முதலியவற்றை இந்தியாவுக்குப் போலந்து அனுப்பும்.

நேபாள மன்னர்

நேபாள மன்னர் திரிபுவனர், ஸ்விட்சர்லாந்தில் காலமானர்.

பார்மோஸா

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் பார்மோஸா பற்றி மேற்கொண்டு எந்தவிதமான முடிவும் செய்யாமல் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

பார்மோஸாவில் சமாதானம் சாத்தியமே என்று இந்தியப் பிரதம மந்திரி ஜவார்ஹர்லால் நேரு அமெரிக்கர் களுக்கு அளித்த டெலிவிஷன் பேட்டியில் கூறினர்.

பார்மோஸா மகாநாட்டுக்கு ருஷ்யா பிரிட்டன் ஏற்பாடு செய்யலாம் என்றும், பார்மோஸாப் பிரச்னை யைச் சமாதானமாகத் தீர்ப்பதுதான் யுத்தத்துக்கு மாற்று வழி என்றும் பிரதமர் நேரு கூறினர்.

பார்மோஸாவுக்கு வடக்கே மூன்று மைல்களுக்கப்பால் உள்ள நான்கு தீவுகளை செஞ்சீன கைப்பற்றியதாக பார்மோஸா ராணுவ அறிக்கை கூறுகிறது.

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே பார் மோஸா பிரச்னையில் பிளவு உண்டாகியிருக்கிறது. இத னைப் பற்றி அமெரிக்க மந்திரி டல்லஸும், பிரிட்டனின் அயல் நாட்டு மந்திரி ஈடனும் பாங்காக்கில் நான்கு மணி நேரம் பேசினர். சீனவுக்கு அருகிலுள்ள மட்சும் குமாயும் கம்யூனிஸ்டு சீனவுக்குச் சொந்தம் என்ற பிரிட்டிஷ் கருத்தை ஈடன் ஊர்ஜிதம் செய்ததாகவும், தேசிய சீனப் படைகள் அத்தீவுகளைக் காலி செய்யக் கூடாதென்பதே டல்லஸின் கருத்து என்றும் கூறப்படுகிறது.

குற்றங்கள் குறைந்த நாடு

ஜனத்தொகை பெருத்ததாகவும், ஆனல் பொருளா தார வசதி குறைந்ததாக இருப்பினும், குற்றங்கள் விஷயத் தில் உலகத்திலேயே குறைந்த விகிதாசாரமுள்ள நாடு என்கிற பெருமைக்கு இந்தியா பாத்திரமாக இருக்கிற தென்று சர்வதேச போலீஸ் கமிஷன் காரியாலயம் வெளி யிட்டுள்ள புள்ளிவிவர ஆராய்ச்சி காட்டுகிறது.

1952-ஆம் ஆண்டில் 34 நாடுகளின் தெரிந்து பதிவான குற்றங்களின் புள்ளிவிவரங்களை ஆராய்ந்து விகிதா சாரத்தை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் ஒரு லட்சம் பேருக்கு 165 வீதம் குற்ற வழக்குகள் நடந்திருக்கின்றன. அதே சமயத்தில் துருக்கி

246, இதாலி 408, அமெரிக்கா 1322, பிரிட்டன் 1342, பிரான்ஸ் 1484, ஜப்பான் 1689, மேற்கு ஜெர்மனி 2992.

ஆதாரக் கல்வி

ஆதாரக் கல்விக் குழு ஒன்றை இந்திய அரசாங்கம் நியமித்துள்ளது. மத்திய கல்வி ஆலோசனைக் கழகத்தின் பகுதியாக இது அமைக்கப் பெற்றிருக்கிறது. இதன் அங்கத்தினர்கள், டாக்டர் ஜாகீர் ஹுஸேன்கான், ஸ்ரீ அரியநாயகம், ஸ்ரீ டி.எஸ். அவிநாசிலிங்கம், ஸ்ரீ பத்ரிதத் வர்மா முதலியோர்.

புதிய எண்ணெய் வயல்

அஸ்ஸாமில் புதிய எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகவும், அதனால் நமது நாட்டுக்குத் தேவையான எண்ணெயில் சுமார் நாலில் ஒரு பங்கு கிடைக்கும் என்றும் மத்திய அரசாங்கத்தின் உற்பத்தி மந்திரி கூறுகிறார்.

தமிழ்த் தாத்தா

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 'தமிழுக்கு மங்காப் புகழைத் தேடித் தந்த பெரியார்' என்று சென்னைப் பிரதமர் புகழ்மாலை சூட்டினார். ஐயரவர்கள் பதிப்பித்த சங்கத் தமிழ் நூல்களையும் பிற பழந் தமிழ் நூல்களையும் கொண்ட கண்காட்சி அடையாறு பிரம்மஞான சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. பல தமிழ்ப் பத்திரிகைகள் ஐயரவர்களின் படத்தையும் வரலாற்றையும் வெளியிட்டுத் தலையங்கங்கள் எழுதின. பல்கலைக் கழகங்களாலும் இயலாததை ஒருவராகப் பாடுபட்டு சாதித்த பெரியார் என்று ஐயரவர்களைக் குறித்து ராஜாஜி பாராட்டினார்.

பூதானம்

பூதானத்துக்கு 1955-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ந் தேதி வரை முப்பத்தாறு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து முந்நூறு ஏகர் நிலம் கிடைத்திருக்கிறது. இதில் ஒரு லட்சத்து இருபதாயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதின்மூன்று ஏகர் புனர் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. பூதானத்தில் சுமார் இருபத்திரண்டு லட்சம் ஏகர் ஈந்து, பீகார் மாகாணம் முதன்மை வகிக்கிறது.

புத்தக 'வைத்தியசாலை'

மற்ற நாடுகளில் இருப்பதுபோல, இந்தியாவிலும் ஒரு புத்தக 'வைத்தியசாலை' ஏற்படுத்தலாமென்று பிரதமர் நேரு அகில பாரதீய ஹிந்து பிரகாஷக் சங்கத்தின் தூதுகோஷ்டியிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. ஹிந்திப் புத்தகங்கள் குறைவாக விற்பனையாவதாகவும். புத்தகங்கள் விற்பனையாகாததற்கு என்ன காரணங்கள் என்று ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பதற்காக 'வைத்தியசாலை' அவசியம் என்றும் நேரு கூறியதாகத் தெரிகிறது. மேற்கூறிய தூதுகோஷ்டியினர் இந்தியாவிலுள்ள முக்கிய ஹிந்தி பிரசுரகர்களின் பிரதிநிதிகள். புத்தகத் தபால் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்றும், சில ராஜ்யங்களில் விதிக்கப்படும் விற்பனை வரியை நீக்க வேண்டும் என்றும், ரயில் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்றும், அயல் நாடுகளிலிருந்து விரும்பத்தகாத புத்தகங்கள் இந்தியாவில் இறக்குமதியாவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் தூதுகோஷ்டி வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

கந்தகக் கனி

மைசூர் ராஜ்யத்தில் இங்கன்தன் என்னும் கிராமத்தின் அருகே ஐந்து மைல் பிரதேசத்தில் சுமார் பதினைந்து

லட்சம் டன் கந்தகத் தாது இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இந்தியா தன் தேவைக்கு வெளிநாட்டுக் கந்தகத்தையே நம்பியிருப்பதால், இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

சினிமா அரங்கு

"கூடுமானவரை அரசாங்கத்தின் தலையீடின்றி கலைகள் வளர்வதற்கு அனுமதிக்க வேண்டும். ஆனால் அவை சமூகத்துக்கே அபாயகரமாகத் திரும்பினால் அரசாங்கம் அவற்றை அடக்கக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்" என்று பிரதம மந்திரி நேரு புது டில்லியில் சினிமா அரங்கை ஆரம்பித்து வைத்தபோது குறிப்பிட்டார்.

குழந்தைகளுக்கான படங்களை இப்போதைவிட அதிகமாகத் தயாரிப்பது அவசியம் என்று பிரதம மந்திரி கூறினார்.

அடுத்த காங்கிரஸ்

அறுபத்தோராவது இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை பாஞ்சாலத்தில் கூடுமென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்த முடிவிலிருந்து தெரிகிறது. 1956-ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம் தேதிக்கு மேல், இருபதாம் தேதிக்குள் மகாசபை கூடும்.

ஆந்திரா பொதுத் தேர்தல்

ஆந்திராவில் பொதுத் தேர்தல் முடிந்தது. மொத்தம் 196 ஸ்தானங்களில், காங்கிரஸ் முன்னணிக்கு 146. கம்யூனிஸ்டுகள் 15 ஸ்தானங்களையும், பிரஜா சோஷலிஸ்டுகள் 13 ஸ்தானங்களையும், சுயேச்சையாளர் 22 ஸ்தானங்களையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

காங்கிரஸ் முன்னணியில் கிருஷிகர் லோக் கட்சியும், பிரஜாக் கட்சியும் சேர்ந்திருக்கின்றன. கிருஷிகர் லோக் கட்சி காங்கிரஸுடன் இணைந்துவிட்டது. முன்னணி பிரஜாக் கட்சிக்கு ஐந்து ஸ்தானங்கள்தான் கிடைத்தன. எனவே காங்கிரசின் தனிப் பலம் 141.

நாட்டுச் செக்குகள்

நாட்டுச் செக்குகள் மூலம் எண்ணெய் ஆட்டும் தொழில் எந்த நிலையில் இருக்கிறதென்பதைப் பரிசீலிக்க இந்திய அரசாங்கம் ஒரு குழுவை நியமித்திருக்கிறது. எண்ணெய் ஆட்டும் தொழிலை எந்த ரீதியில் அபிவிருத்தி செய்யலாம் என்று ஆராய்ச்சி நடத்தி சிபாரிசு செய்யுமாறு அரசாங்கம் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்திய பல்புகள்

1954-ஆம் ஆண்டில் இந்தியாவில் உற்பத்தியான மின்சார பல்புகளின் எண்ணிக்கை 2,22,90,000 ஆகும். முந்திய வருஷத்தில் 1,96,70,000 பல்புகள்தான் உற்பத்தியாயின.

இந்தியாவின் லட்சாதிபதிகள்

இந்தியாவில் வருஷத்துக்கு ஐந்து லட்ச ரூபாய்க்கு மேல் வருமானமுள்ளவர்கள் 120 பேர் மட்டுமே இருக்கிறார்கள். ஏழு லட்சம் வரை வருமானம் உள்ளவர்கள் 74 பேர். ஏழு முதல் பத்து லட்சம் வரை வருமானமுள்ளவர்கள் 46 பேர். ரூபாய் பத்து லட்சத்துக்கு மேல் வருமானமுள்ளவர்கள் ஒன்று அல்லது இரண்டு பேர் இருக்கக்கூடும். இத் தகவலை நிதி மந்திரி தேஷ்முக் ராஜ்ய சபையில் கூறினார்.

அரசாங்கப் பரிசு பெற்ற நூல்கள்

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி முதல் 1954-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி வரை 14 பிராந்திய

மொழிகளிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப் பெற்ற சிறந்த புத்தகங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வீதம் பரிசளிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்தது. சாஹித்ய அகாடமியின் சிபாரிசின் பேரிலேயே பரிசுக்குரிய புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றன. கீழ்க்காணும் புத்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் அரசாங்கம் ஐயாயிரம் ரூபாய் பரிசளித்திருக்கிறது.

1. தமிழ்:—"தமிழ் இன்பம்" (கட்டுரைகள்) ஆர். பி. சேதுப்பிள்ளை எழுதியது.

2. தெலுங்கு:—"அந்துருல சாங்கிக சரித்திர" காலஞ் சென்ற சுரவரம் பிரதாப் ரெட்டி எழுதியது.

3. மலையாளம்:—"சாஷா சாஹித்ய சரித்திரம்" ஆர். நாராயண பணிக்கர் எழுதியது.

4. கன்னடம்:—"ஸ்ரீ ராமாயண தர்ஷணம்" (காவியம்) குவம்பு எழுதியது.

5. ஹிந்தி:—"ஹிம் தரங்கிணி" (கவிதை) மகன் லால் சதுர்வேதி எழுதியது.

அஸ்ஸாமிய வங்காள, குஜராத்தி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, உருது ஆகிய மொழிப் புத்தகங்களுக்கும் இத்தகைய பரிசுகள் வழங்கத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது.

உலக பாங்கு உதவி

இந்தியக் கைத்தொழில்—கடன் உதவி முதலீடு ஸ்தாபனத்துக்கு, உலக அபிவிருத்தி பாங்கி ஐந்து கோடி ரூபாய் கடனுக உதவியிருக்கிறது. இந்த ஸ்தாபனம் இந்தியாவில் தனிப்பட்டோர் முயற்சியாகும்.

பாரதி நூல்கள்

"அரசாங்கத்தார் வசமுள்ள பாரதியாரின் நூல்கள், பொதுமக்களின் உபயோகத்துக்கு எவ்விதத் தங்குதடையுமின்றி வழங்கப்படும். அதை மக்கள் நன்கு உபயோகிக்கலாம். ஆனால் அதிகார பூர்வமாக இருப்பதை மாற்றி திருத்தாமல் அப்படியே உபயோகிக்க வேண்டும்" என்று நிதி மந்திரி சென்னை சட்டசபையில் தெரிவித்தார்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

புதிய பிரயாண நூல்

●

மலேயா முதல் கானடா வரை

●

'உலகம் சுற்றும் தமிழன்'
ஏ. கே. செட்டியார்
எழுதியது

●

மலேயா, சிங்கப்பூர், இந்தோனேஷ்யா–ஜாவா, பாலி, சுமத்ரா–, ஆஸ்திரேலியா, பீஜித் தீவுகள், கானடா முதலிய நாடுகளில் பிரயாண அனுபவங்கள்.

விலை ரூபாய் ஐந்து

KUMARI MALAR REGD. NO. M. 481

மகிழ்ச்சிக்குரிய முன்னேற்றம்

1954-ஆம் ஆண்டில் 18·18 கோடி ரூபாய்க்குப்

புதிய பாலிஸிகள்

வளர்ச்சிப் பாதையில் தளராத வேகம்

1953-ல் 12 கோடி ரூபாய்

தலைவர் :

லாலா லட்சுமிபத் சிங்கானியா

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.,

தலைமைக் காரியாலயம் :

7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு - கல்கத்தா

இது ஒரு ஜே. கே. ஸ்தாபனம்

சென்னைக் கிளை :

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்

362, எஸ்பிளனேட் - சென்னை-1